தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"

ஆண்டு சந்தா ரூ. 6
ஆறுமாதச் சந்தா ரூ. 3

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை | 9—7—55 | சனிக்கிழமை | இதழ் 4

குமாரி கோமளம்

காரைமுத்துப்புலவர்

"வெகு நேரமாகக் காத்திருக்கிறேன். ஸ்டுடியோவிலிருந்து வந்ததுமுதல் உங்களுக்காகத்தான் 'மேக் அப்'பைக்கூடக் கலைக்காமல் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"கோமளம்! இது என்ன கோலம்?"

"மேனகை வேடம்! விசுவாமித்திரரை மயக்கும கட்டம் இன்று பிடிக்கப்பட்டது......!"

"ஓஹோ!"...என்று இழுத்துக் கொண்டே கண்களை கோமளத்தின் மீது மேயவிட்டுக்கொண்டிருந்தார் டைரக்டர். கோமளம் மெல்லிய மேலாடையுடன் அரை நிர்வாணமாக இருந்தாள். படுக்கையறையின் சுவரைச்சுற்றி மாட்டப்பட்டிருந்த கோமளாவின் வேறுவேறு விதமான 'போஸ்'கள் டைரக்டரின உள்ளத்தைக குருடாக்கி தடுமாறச் செய்துகொண்டிருந்தன.

"கோமளா!"

"........" டைரக்டரின் அருகில் அமர்ந்தாள்.

"என்னை நீ இவ்வளவு சௌரவிப்பாயென்று எண்ணிக்கூடப் பார்க்கவில்லை!"

"......" நீண்ட பெருமூச்சோடு டைரக்டரின் தோளில் சாய்ந்தாள் கோமளம்.

இருள்சூழ்ந்தது; இருவருக்குமிடையே சிறிதுநேரம் அமைதி நிலவியது:

"கோமளம்!"

"இ......ம்!" சுரங்கக்குரல்

டைரக்டர் கோமளத்தை உற்றுக் கவனித்தார். கோமளத்தின மேலாடை ஒதுங்கிக்கிடநதது. ஆம்; அதுவரை காவல் புரிந்துகொணடிருந்தகண்ணுடித்திரையும் அகன்றுவிட்டது. கரும்புததோட்டத்து மதயானையாக வேண்டிய வேளை, ஆனால், டைரக்டர் ஏனோ சிலையாக இருந்தார். கோமளாவின் மார்பகத்தின் வலப்புறத்தில் காணப்பட்ட ஒரு சிறிய வடு டைரக்டரின் கண்களை சுழலச் செய்துவிட்டது.

"ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? அதற்குள்ளாகவா தூக்கம்?" செல்லமாகக் கேட்டாள் கோமளம். டைரக்டர் ஊமையாக இருந்தார். அவரது உதடுகள் மட்டும் ஏதோ சொல்லின.

★

"கோமளம், பெய்யாமல் பெய்யும் கான மழை கேட்டு, கொய்யாத்தோட்டமே மெய்மறந்து கிடக்கிறது மின்னல் கொடியே! குயிலின் குரல் கேட்டு துயில் ஒழித்து நிற்கும் இளம் இதயங்களெல்லாம் கலாதேவியின் இன்ப நாதத்திலே சொக்கி மிதக்கிறார்கள் செண்பகமே! பாளை மணம் கமழும் உன் பங்களாவின் தளத்திலிருந்து இந்த ஊர்க் காட்சியை எப்போதாவது கண்டதுண்டா நீ? கொய்யாத்தோட்டம்! யாரோ பொய்யாமொழிப் புலவன் இட்டழைத்த திருநாமம் என்றுதான் தோன்றும். அழகு அணி வகுத்து நிற்பதுபோல ஊரைச் சுற்றிலும் ஓங்கிவளர்ந்த சவுக்கு மரங்கள்! நிர்வாண மங்கையர் நீர்த்தேக்கத்தில் தவ்வாண்டையடிப்பதற்கு உவமையென பப்பாளிப்பழங்கள் மரத்தினின்று அறுந்துவிழும் தூரத்துக்காட்சி! அந்தக் கவின்மிகு காட்சியை நீ ஒருநாளாவது கண்டு இன்புற்றிருக்கும்போது, நான் பக்கமிருந்து உன் எழிலை என் இதய தாகத்திற்கு இரையாக்கிக்கொள்ள வேண்டும் இன்பமே" இதுபோன்ற போதைப் பேச்சுக்கள் கோமளத்திற்கு சலித்துப்போனவைதான். ஆனாலும் தரம் கண்டு உடல்காட்டி தன்னை உயர்த்திக்கொண்டவள் அவள். ரசம்போன கண்ணாடியிலே முகம் பார்த்து, மணமற்ற மாவை பூசிக்கொண்டு ஆற்றோரத்து ஓலைக் குடிசையிலே அன்றாடம் பயங்கர வாழ்க்கை நடத்தியவள்தான் ஒரு காலத்தில். இரவு மணி ஏழாகி விட்டதே, இன்னும் எவரும் வரவில்லையே என தினம் தினம் ஏங்கி, ஏங்கிச் செத்துப் பிழைத்தவள்தான்; ஆனால், இன்று! அவள் நவீன சிங்காரி! நடனகலா ராணி! சீமான் புரத்து 'சின்னப்பிரபு'க்களின் சித்தம் கொய்திடும் அழகுருவம்! 'மாயப்பிரபஞ்சங்'களுக்கும் காயத்தைப் பொய்யென்றுரைக்கும் போலிகளுக்கும் அவளுடைய நீள் கூந்தல் குதிரைச் சவுக்கு! புருவத்தை அரைவட்டமாக்கி, கருவிழியை நாணேற்றி அவள் தொடுக்கின்ற கணை, நாடாளும் இதயங்களையும் வேதாந்த உள்ளங்களையும் துளைத்திடக் கூடியது. ஆம்; கோமளாவின் நிலை உயர்ந்துவிட்டது. விண்மீன்கள் முளைத்திருக்கும் கலைவானமாகத் திகழும் கொய்யாத்தோட்டத்தின் கோலமுடி மாதரசி கோமளம்! இன்று அவள் சொகுசு வாழ்வின் சிகரத்தில் வைரக்கற்கள் பதித்த பொற்கொடி ஊஞ்சலில் ஆடி மகிழ்கிறாள். ஆனால், அன்று அவள் பட்ட துன்பம்? ஆற்றங்கரை மோகினியாக இருந்தாளே அப்போது அவளைத்தின்ற தூற்றல்கள்?

★

குமாரசாமி, அரளிக்கோட்டை மிராசுதாரின் ஏகப்புதல்வன். நெஞ்சில் பட்டதை நடத்திடத் துடிக்கும் வசதிபெற்ற செல்வக்குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுக்குத் திருமணமென்றால் ஊரே அமளிப்படாதா என்ன! தெரு நீளத்திற்கும் காவணம். ஊர் முழுவதற்கும் சமையல் ஏற்பாடு. விருந்தினரை வரவேற்க, தனித் தனியான வரவேற்புக்குழுவினர். அரளிக்கோட்டைக் கிராமம், திருமணத்திற்கு ஒருவாரம் முன்னதாகவே திருவிழாக் கோலம் பூண்டுவிட்டது. அத்தனை கெடுபிடி! அவ்வளவு சிறப்பு! ஒருநாளைக்கு ஒன்பதுமுறை மோட்டாரிலும், சைக்கிளிலுமாக ஊரை வலம்வரும் குமாரசாமி பத்து நாட்களுக்கு முன்னதாகவே அடைக்கோழியாக - அந்தப்புர 'ராணி'யாக மாறிவிட்டானென்றால் திருமணத்தின் சிறப்பு சொல்லவேறு கூறவேண்டுமா? மேளமும் பாண்டு வாத்தியமும் போட்டி போட்டு முழங்கின. பன்னீரும் சந்தனமும், மணவீட்டை அரபி நாட்டு மலர் வனத்திற்கு ஈடுகாட்டியது. ஆனால், அரளிக்கோட்டை மிராசுதார் அரங்கநாதர் முகத்தை மட்டும் சோகம் முதலைப் பிடியாக பிடித்துக்கொண்டிருந்தது. எதையோ அவர் எதிர்பார்த்தவராக, பந்தல் வாயிலுக்கு வருவதும், போவதுமாக இருந்தார். "ஏன்; என்ன நடந்தது?" என்று அவரிடம் துணிந்து கேட்க அந்த வட்டாரத்திலேயே ஆள் கிடையாது; அதுவும் சோகத்தில் தத்தளிக்கும்போது



(10-ம் பக்கம் பார்க்க)

தோட்டத்து மலர்கள்

தில்லை-மறைமுதல்வன்.

நான் பிறப்பதற்கு முன்னால் என்னுடைய அப்பாவும் அம்மாவும் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வார்களாம்! நான் பிறந்த பிறகு சண்டை போடுவதில்லையாம். ஏன் தெரியுமா? குழந்தை இல்லையே என்ற குறை அவர்களை சண்டைபோட வைத்தது. குழந்தை பிறந்ததும் குதூகலத்தால் எல்லாவற்றையும் மறந்துவிட்டார்கள்!

★

மனிதன் எவ்வளவோ பொருள்களைச் சிருஷ்டித்திருக்கிறான். தூரிகையை வர்ணங்களில் நனைத்து திரையில் அப்படியும் இப்படியுமாக ஏதோ கிறுக்குகிறான். அது அற்புதமான ஓவியமாகிவிடுகிறது! மனிதனின் கையிலுள்ள உளி பாறைமேல் நடனமிடுகிறது. அவ்வளவுதான்; பாறைகள் நெஞ்சையள்ளும் சிற்பங்களாக மாறிவிடுகின்றன! மனிதன் எழுத்தாணியினால் ஏட்டில் ஏதோ எழுதுகிறான்-மனிதகுலமே அவன் தந்த கவிதைகளில் லயித்துவிடுகிறது! இப்படி எவ்வளவோ அற்புதமான காரியங்களைச் செய்கிறான் மனிதன்.

இவைகளில் தலைசிறந்தது எது? மனித சிருஷ்டிகளில் மிகவும் விலையுயர்ந்தது எது? இந்தக் கேள்விக்கு கிடைக்கும் ஒரே பதில் 'குழந்தைகள்' என்பதுதான்.

இன்பம் உமிழ்ந்த ஒளி முத்துக்கள், தான் குழந்தைகள்! ஆம்; ஆண் பெண் இருவரின் கூட்டுக் குரலில் பிறந்த வீணை நாதம்-குழந்தை! ஆண் பெண் இருவரின் விழித்தழுவுதலில் தெறித்த மின்னல்-குழந்தை! வாழ்க்கை ஒரு பூங்கா-அதிலே உள்ள மலர்கள் தான் குழந்தைகள்! காதல் ஒரு மரம் அதில் குலுங்கும் கனிகள் தான் குழந்தைகள்!

பிஞ்சுக் கால்களில் செருப் பணிந்து, தலைசாய்த்து, பேதமையோடு நடந்துபோகிறார்கள். உலகையே மறந்து உற்சாகத்தோடு விளையாடுகிறார்கள். தங்களுக்கு பிடித்தவைகளுக்காக பிடிவாதம் செய்கிறார்கள் - பிடிக்காதவைகளை தூக்கி எறிகிறார்கள். விரும்பியது கிடைத்தால் மனம்விட்டு வாய் நிறைய சிரிக்கிறார்கள். - கிடைக்காவிட்டால் சத்தம் போட்டு அழுது புரளுகிறார்கள். வீட்டுப் பண்டங்களை உடைத்து தொல்லை கொடுக்கிறார்கள் - சுத்தமான வீட்டினுள் கரியால் கோடுகள் கிறுக்கியும், காகிதங்களை கிழித்துப் போட்டும் விஷமங்கள் செய்கிறார்கள்!

ஆனால், இவைகளில் தான் அழகிருக்கிறது; உயிரிருக்கிறது; வாழ்க்கை இருக்கிறது; குழந்தைகளின் பாதச் சுவடுகள் படாத இடங்கள் சூன்யம் கவிந்த பொட்டல் வெளிகள் தான்!

★

அதிகாலையில் சோலை மலர்கள் மீது காணப்படுகின்றனவே பனித் துளிகள்-அவை போன்றவை குழந்தைகள். ஏனெனில் குழந்தைகளிடம் அவ்வளவு பரிசுத்தம் இருக்கிறது. குழந்தைகளின் வெளிப்புறத்தில் அழுக்கிருக்கும். ஆனால், உள்ளே - அவர்கள் அகத்தில் கொஞ்சங்கூட கறை கிடையாது! தூசி படியாத, தூய்மையான மனம் குழந்தை மனம்.

அவர்களுக்கு கவலை கிடையாது; துன்பங்கள் தெரியாது. பாம்புகளோடும் விளையாட முனைவார்கள், பயம் தெரியாது; தீமை செய்யும் எண்ணம் கிடையாது; அவர்கள் மனதில் பேதமில்லை; பிளவில்லை; உயர்வு . தாழ்வில்லை. எல்லோராலும் வெறுக்கப்பட்டவர்கள் அவர்களுக்கு உயர்ந்தவர்களாக இருப்பார்கள்! அவர்கள் இதயம் எல்லையின்றி பிரிந்திருக்கும்.

இதெல்லாம் ஞானப்பல்முளைக்கு முன்புதான்-அப்போதுதான் சிறப்பிருக்கும்! அறிவின் ரேகைகள் அவர்களிடம் படரு முன்னால்-வாழ்வின் துயரப்புகைகளினால் அவர்களுடைய மனோராஜ்யம் சலனமடையுமுன்னால் - அவர்களின் குதலை மொழி களங்கமில்லாதது! அதைப்போல இன்பந்தருவது வேறு எதுவுமே உலகிலில்லை. அந்த மதலைப் பேச்சை வார்த்தைகளால் வர்ணிக்கவும் முடியாது.

★

கண்ணம்மாவை குழந்தையாக்கி பாடும்போது பாரதி தன்னையே மறந்துவிடுகிறான். அவனுடைய கவிதை இதயம் பொங்கி அவனையே மூழ்கடித்துவிடுகிறது.

ஓடி வருகையில் உள்ளங்குளிருகிறது! உச்சிதனை முகந்தால் கருவம் ஓங்கி வளருகிறது! கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம் கள்வெறி கொள்ளுகிறது! நெற்றி சுருங்கக் கண்டால் நெஞ்சு பதைக்கிறது! கண்ணில் நீர்வழிந்தால் நெஞ்சில் உதிரங் கொட்டுகிறது! ஆம்; பாரதிக்குதான் இப்படியெல்லாம் ஏற்படுகிறது, குழந்தை கண்ணம்மாவினால்!

இன்பக் கதைகளெல்லாம்
உன்னைப்போல்
ஏடுகள் சொல்வ துண்டோ?
அன்பு தருவதிலே-உனைநேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?
மார்பிலணிவதற்கே-உன்னைப்
போல்
வைர மணிகளுண்டோ?
சீர் பெற்று வாழ்வதற்கே-
உன்னைப்போல்
செல்வம் பிறிதுமுண்டோ?

என்று கேட்கிறான் பாரதி! அவன் சொல்வது முற்றிலும் உண்மை!

★

அன்பின் பணியும், வையம் பெறும் பயனும் எங்கே இருக்கிறது? பலர் பலவிதமாக சொல்வர். ஆனால் பாரதிதாசன் சொல்லுவதுதான் சரி.

கற்றார் போல் அக் குழந்தை
கண்டு தாய் கைப் புறத்தில்
நற்றமிழ்ப் பால்குடிக்க
நகர்த்தும் தன் சிவந்த வாயை
அணைத்துக்கொண்டிடுவாள் அன்னை
அமிழ்தச் செம்பினையும், தன்பால்
இனை இதழ்குவிய உண்ணும்
இளம் குழந்தையையும் சேர்த்தே
அணி மேலாடையினால் மூடி
அவள் இடைஅசைப்பாள்! அன்பின்
பணி காண்பேன் வையம் பெற்ற
பயனைக் கண்ணாரக் காண்பேன்.

என்கிறார் புரட்சிக்கவி. குழந்தை, தாயிடம் பால் குடிப்பதில் அன்பின் பணியை-வையம் பெறும் பயனைக் காண்கிறது கவியின் உள்ளம்!

குழந்தை சிரிக்கிறது! அதைக் காண்கிறார் புதுவைக்கவி.

மெல்லென அறிந்த மின்னல்
அந்த
செல்வக் குழந்தையின் சிரிப்பு!

என்று பாடிவிடுகிறார். அத்துடன் நிறுத்தவில்லை, மேலும் பாடுகிறார்.

பிள்ளை சிரிக்கையில்
சிரித்தது வையம்!
சிரித்தது வானமே!

அடடா! எத்தனை அற்புதம்! இரண்டே வரியில் எல்லாம் அடக்கம்! குழந்தைகள் சிரிக்கின்றன. குவலயம் சாந்தி பெறுகிறது!

★

குழலிலிருந்துவரும் இன்னிசை, அருமை எனகிறார்கள். யாழ் தெளிக்கும் அமுதோசை நெஞ்சை அள்ளுகிறது என்கிறார்கள். ஏன் இப்படி சொல்கிறார்கள் இவர்கள்? காரணம் இதுதான்; அவர்கள் தங்கள் குழந்தைகளின் மழலைச் சொல்லை கேட்கவில்லை!

இதைத்தான் சொன்னான் வள்ளுவன்,

"குழல் இனிது யாழ் இனிது
என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளாதவர்" என்று!

ஆனால், கலைஞர் கருணாநிதி வேறு விதமாகச் சொல்கிறார். "குழலையும் யாழையும் வெல்லுவாய என்ற குறளையும் வெல்லும் குழந்தையின மழலை மொழி" என்கிறார் அவர். ஆகா! அற்புதம! என்று நம்மை அறியாமலே நம உதடுகள் முணு முணுக்கின்றன.

கருணாநிதி குழந்தையை எதற்கு ஒப்பிடுகிறார் பாருங்கள். "வயலிலே நாற்று! வண்ணப் பொய்கையில் மீன்குஞ்சு! காட்டில் மான்குட்டி! வீட்டில குழந்தை!" எத்தனை அழகான சொல்லோவியம்!

"நல்ல மனம் படைத்தவர் நாத்திகர்" என்கிறார் கருணாநிதி. 'இது எப்படி?' எனகிறார்கள் எல்லோரும் குழப்பத்தோடு, "குழந்தாய்! உனக்கு கடவுள் என்ற எண்ணமுமில்லை. நீயும் நாத்திகவாதி. "நல்ல மனத்திற்கு" குழந்தை மனம் படைத்தவர்" என்று பெயர் ஆகையால் நாத்திகர் நல்ல மனம் படைத்தவர் என்று அவர் விளக்கும்போது, எல்லோர் விழிகளும் வியப்பால் விரிகின்றன.

அது சரி; குழந்தைக்கு ஏன் கடவுள் எண்ணமில்லை? இந்த கேள்விக்கு, இரண்டே வரிகளில் அழகாக பதில் சொல்லிவிடுகிறார் கருணாநிதி.

"குழந்தாய்! நீ யாரையும் கெடுப்பதில்லை. அதனால்தான் உனக்குக் கடவுள் அவசியமில்லை!"

★

கண்ணதாசனின் 'இல்லறஜோதி'யில் ஒரு அருமையான கட்டம்.

அவனோ, கவிதை வானில் கா... மிசைக்கும் தேன் சிட்டு. அவனுக்கு வாய்த்த மனைவியோ, ரசிக உள்ளமில்லாத அசட்டுப்பெண்! கவி...னின் எழிலோவியங்களில் நெஞ்...பறிகொடுத்தாள் வேறொருத்தி. அவள் கவிஞனுக்கு 'ரசிகை' ஆகிறாள்.

ஒருநாள் இரவு கவிஞன் த... ரசிகையைக் காண புறப்படுகிறான். அப்போதுவிஷயம் புரிந்துகொண்... மனைவி குறுக்கிடுகிறாள்:

"எங்கே போகிறீர்கள்."

கவிஞன் சிரிக்கிறான்.

"எங்கேயா? கவிஞன் எங்... போவான்? கலை இருக்குமிடத்தை தேடித்தான்!"

உடனே மனைவி தன்குழந்தையை கைகளில் ஏந்தி அவன் முன்னே நீட்டியபடி சொல்கிறாள்.

"இங்கே தெரியவில்லையா உ...களுக்கு கலை?"

இந்தக் கேள்வியில் எவ்வளவு அழகும் பொருளும் இருக்கிறது பாருங்கள்! எத்தனை எத்தனையோ கவிஞர்கள் குழந்தையை எப்ப... எப்படியோ வர்ணித்திருக்கிறார்கள். குளிர் நிலவே! தேன் வண்டே! கன்னலின் சாறே! பனி... குருவே! செந்தமிழே! தெ... பாங்கே! எனறெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கண்ணதாசன குழந்தையைக் காட்டி "இங்கே தெரியவில்லையா கலை?" என்று கேட்கிறார். கலையுள்ளம் மகிழ்கிறது.

★

வளர்ந்த மனிதனின் பேச்சில் காரண காரிய அறிவின் நிழல் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் குழந்தைச் செல்வங்களின் குதலை மொழியில் பேதமைதான் இருக்கிறது. அந்தப் பேதமையில்தான் பேரின்பமும் இருக்கிறது!

இந்தப் பேதமையின் பேரின்பத்தை புரிந்துகொள்ள வேண்டுமானால் நாம் பிரெஞ்சு நாட்டு பேரு மன்னன் பால் சாக்கிடம் தான போகவேண்டும். அவன் விண்ணுக்கும் மண்ணுக்குமாக விரிந்து நிற்கும் ஆற்றல் படைத்த மேதை. அவனுடைய கதைத் தொகுதியில் குழந்தையின் பேதமையை விளக்கும் அற்புதமான சித்திரம் ஒன்றிருக்கிறது. அதுஇது!

ராணி காதரைனின் மாமனார் பிரெஞ்சு தேசத்தின் மன்னனாக இருந்தார். அவர் அப்போது நோயினால் பீடிக்கப்பட்டு படுக்கையில் இருந்தார். அவர் மற்ற முடிதாங்கிகளிலிருந்து வேறுபட்டவர். கலையின் ரசிகராக - கலைஞர்களின் தோழனாக - இருந்தார். அவர் லியனார்டோ டாவின்ஸி, ராபேல், பிரைமாட்டிஸ்போன்ற கலைச்சிற்பிகளின் நட்பைப் பெற்றவர். அவர்களுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளையெல்லாம் செய்து வந்தார்.

மாமனாரின் கலை ஆர்வத்தை உணர்ந்த காதரைன் அவரை மகிழ்விப்பதற்காக, அவருக்கு மிகவும் பிடித்த இத்தாலி நாட்டு ஓவியங்கள் பலவற்றை அவ்வப்போது வாங்கி அனுப்பிவந்தாள். அவைகளில் ஒரு படம் மட்டும் மிகவும் அருமையாக அமைந்திருந்தது. அதுபோன்ற சித்திரத்தை இதுவரை யாரும் தீட்டியதில்லை என்று சொல்லும் வண்ணம் அதை எழுதியிருந்தான். வெனீஸ் நகரத்து

(10-ம் பக்கம் பார்க்க)

எண்ணம்

கண்ணதாசன்

" 'பச்சைத் திராவிடர்' காமராசர் !"

குடியேற்றத்தில் திராவிட கழகத்தை, "கைதட்டி" அழைத்தவாறு நடந்த காமராசர்.

பார்ப்பனர்களை வெறுப்பவர் என்று கூறப்படும் காமராசர்-

சரியோ தவறோ, வீரர் என்று பெயர் பெற்றுவிட்ட காமராசர்.

இதோ! ஒரு சூரத்தனமான காரியம் செய்துள்ளார். தீண்டாமை சம்பந்தமாக அச்சடிக்கப்பட்ட ஒரு போஸ்டரை, 'சில' பார்ப்பனப் பிண்டங்களின், எதிர்ப்புக் காரணமாகத் திரும்பப் பெற்றுவிட்டார்! சிலர் - மிகச்சிலர் - சனத்தொகையிலேயே மூன்றில் ஒரு பங்கு - அதிலும் மிகச்சிலர் - எதிர்த்தார்கள். எதிர்த்தார்கள் என்றால் பெரும் படைபலத்தைப் பின்னணியில் கொண்டுகூட அல்ல! போராட்டம் நடத்தியும் அல்ல! அதற்குத் திராணி ஏது அவர்களுக்கு! வெறும் அறிக்கை மிரட்டல்! காமராசர் கதிகலங்கினார்-'வாபஸ், பெற்றுவிட்டார்! இதிலிருந்து நமக்குப் புரிவது இதுதான். காங்கிரசில் இருக்கிற எந்தப் பச்சை, ஊதா-மஞ்சள் திராவிடனும் பார்ப்பனர்களைக் கண்டு பயந்து சாகும் நிலையில்தான் இருக்கமுடியும்!

ஆயிரக்கணக்கானோர்-நம்மவர்-சிறை சென்றபோது வராத அனுதாபம்-பார்ப்பனர்மீது சுலபத்தில் வந்துவிடுகிறது காங்கிரஸ் முத்திரை போட்டுக்கொண்டவர்களுக்கு!

இது குறித்து பொதுச்செயலாளர் "தக்க நடவடிக்கை"க்கு வழி வகுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்!

அத்தகு போஸ்டரை அச்சிட்டு ஊர் ஊராக ஒட்டவேண்டும்! நாட்டோர், அறிந்துகொள்வது எப்போது! போஸ்டர் ஒட்டும் நாள் விரைவில் வரட்டும்!

புதுவைத் திருமணம்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் மகன் திரு. மன்னர் மன்னன் என்ற கோபதிக்கும், மைசூர் அரசவைக் கோள் நிலை ஆராய்ச்சி வல்லுநர் வீரராகவனார் மகள் திருமதி சாவித்திரிக்கும், புதுவையில் 26-6-55 அன்று காலை 9 மணிக்கு, கவிஞரின் இல்லத்தில் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

தன் மதிப்பியக்கத் தொண்டரும், சென்னை அரசினர் கதர்த்துறை ஆலோசகருமாகிய கோவை சி. ஏ. அய்யாமுத்து அவர்களை விழாவிற்குத் தலைமையேற்குமாறு புரட்சிக்கவிஞர் வேண்டிக்கொண்டார். அன்னாரின் மருமகன் கரூர் புலவர் கண்ணப்பர் வழிமொழிந்தார்.

தலைவர் தம் உரையில், இத்திருமணத்தை நடத்திவைப்பதில் தாம் பெருமையடைவதாகவும், முற்போக்குக் கருத்துக்களை மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயங்கலாகாது என்றும் கூறி மணமக்களின் ஒப்புதலைக் கேட்டார். அவர்கள் ஒப்புதல் தெரிவித்தபின், மாலை மாற்றிக்கொண்டு மோதிரம் மாற்றியதோடு திருமண நிகழ்ச்சி நடந்தேறியது.

மணமக்களை வாழ்த்தி மடல்களும் செய்திகளும் படிக்கப்பட்டபின், வீராசாமி M. P., ஆசிரியர் வேலாயுதனார், தொழிற் கட்சித் தலைவர் வ. [illegible], [illegible] திருமதி வை. அ. மஞ்சுளாபாய், முத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மணமகன் நன்றிகூறக் காலை நிகழ்ச்சி 10-30 மணிக்கு இனிது முடிவுற்றது. பகல் விருந்துக்குப்பின் மாலை 5 மணிக்கு வாழ்த்துரை விரிவுரைகள் நடந்தேறின. பன்மொழிப் புலவர் ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் மொழி இலக்கியத்துறை பற்றியும், புலவர் வை. பொன்னம்பலனார் இன உணர்ச்சித் துறை பற்றியும் சீரிய கருத்துக்களை வழங்கினர். காலப்போக்கு நிகழ்ச்சியாக அமையாமல் கருத்து விளக்க நிகழ்ச்சியாக அமைந்தது குறிப்பிடத் தக்கது.

பெரியார் ஈ. வே. ரா, இரா. நெடுஞ்செழியன், எஸ். குருசாமி, ஜி. டி. நாயுடு, கருணாநிதி, மற்றும் தமிழ்நாட்டுப் பெருமக்கள், புலவர், இயக்கத் தலைவர்கள், நடிகர்கள் உட்பட ஏராளமான வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர். விழா இரவு 9 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

தி. மு. கழக இரண்டாவது மாநில

மாநாடு

தொகைசேரும் காலம்தான்-
நம் படைகூடும் காலம்!

தோழர்களே!

ரூ. 25,000—நமக்குத் தேவை!
ரூ. 7,000—சேர்ந்திருப்பது!

இன்னும்

சேரவேண்டியது ரூ. 18,000

மறந்துவிடாதீர்கள்

தொகைசேரும் காலம்தான்-
நம் படைகூடும் காலம்!

பாவை

சிங்கப்பூரிலே ஒரு சுவையான கத்திக்குத்து வழக்கு நடைபெற்றிருக்கிறது. நீதிபதியே வழக்கை விசாரிக்க முடியாமல் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டார்.

காதலி, அவளுடைய நண்பர் ஒருவருடன் வெளியே சென்று வந்தாளாம். காதலன், வீட்டிலே காத்திருந்தானாம். ஆத்திரப்பட்ட காதலன், காதலி வந்தவுடன் அவளுடைய மார்பிலும், முகத்திலும் குத்திவிட்டானாம். இத்தகைய குற்றச்சாட்டின் பேரில் அவனுக்கு ஜன்மதண்டனை தரவேண்டுமென்று சட்டம் வாதாடியது.

ஆனால் காதலி தனது வாக்குமூலத்தில், "எனக்காக அவர் பொறுமையோடு வீட்டில் காத்துக்கொண்டிருந்தார். நான் வீட்டுக்குள்ளே போனதும் அவர் என்னைப் பின்தொடர்ந்தார். அவர் கையில் கத்தி இருந்ததுதான் எனக்குத் தெரியும். கத்தியைப் பறிக்க முயன்றேன், அவர் என்னை கத்தியால் குத்தமாட்டார் என்று எனக்குத் தெரியும். ஒருவேளை நான் அவ்வாறு உபயோகித்திருப்பேன்: நிச்சயமாக அவர் அவ்வாறு செய்யமாட்டார்." காதலி இவ்வாறு சொல்லுகையில், குற்றக் கூண்டிலே காதலன் தலைகுனிந்து நின்றான்.

இதுகேட்ட நீதிபதி "புகார் செய்தவரே சாட்சியமளிக்காதபோது இவ்வழக்கை நடத்துவதெப்படி?" என்று கூறி காதலனை விடுதலை செய்துவிட்டார். அவன் பெயர் வீ-இங்-நிக். அவள் பெயர் தெரசா.

மீர்சாகிப்பேட்டை அழகிரி நாடக மன்றத்தாரின்

"அத்தான்."

எஸ். எஸ். தென்னரசு எழுதியது

9-7-55 சனி மாலை 6 மணிக்கு

"பிரசண்ட விகடன்" ஆசிரியர் நாரணதுரைக்கண்ணன் அவர்கள் தலைமையில் எழும்பூர் மியூசியம் தியேட்டரில் நடைபெறும்.

நடிப்போர்: திருநாவு, டி. எ. வெங்கடாசலம், மு. புரட்சிமணி, சாரங்கன், வி. கன்னியப்பன், சி. ஆர். பழனி, டி. ஞானசேகரன், [illegible], வி. [illegible]சந்திரன், [illegible], மனோகரி; வி. சரசுவதி, ஆர். ஆண்டாள், ஜெயலெட்சுமி.

நன்றி: எ. தன்ராஜ். அமைப்பாளர்: [illegible].

கட்டணம் ரூ: 2, 1, அணா 8. [illegible]

ஈ. வீ. கே. சம்பத்

இதில் தென்னாட்டு பாங்கிகள் எனக்குறிப்பிடும்போது, சென்னை, ஆந்திரம், அய்தராபாத், மைசூர், திரு-கொச்சி ஆகிய ஐந்து மாநிலங்களில் தங்கள் தலைமை நிலையங்களை அமைத்துக்கொண்டும், பெரும்பாலும் இந்தப பகுதிகளில் வாழ்பவர்களின் மூலதனத்தைக்கொண்டு நடத்தப்படும் பாங்கிகளையே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எண்ணிக்கையில் வடநாட்டு பாங்கிகளும் 36 தான், தென்னாட்டு பாங்கிகளும் 36 தான் என்றாலும் தன்மையில், வணிப ஆற்றலில், வடநாட்டு பாங்கிகள் தென்னாட்டு பாங்கிகளைவிட பூதாகாரமான அளவில் பெருத்து நிற்பதைக் கவனிக்க வேண்டும். தென்னாட்டு பாங்கிகள் அனைத்திற்கும் கிடைத்த 1 வருஷ நிகர லாபம் 1 கோடி ரூபாயைககூட எட்டவில்லை. 99 லட்சத்து 77 ஆயிரத்து 245 தான். வடவரின் பாங்கிகள் பெற்றுள்ள 1 வருஷ நிகர லாபம் (1953) 16 கோடியே 81 லட்சத்து 31 ஆயிரத்து 37 ஆகும்.

தென்னாட்டு பாங்கிகளில் உள்ள மொத்த மூலதனம் 6 கோடியே 74 லட்சத்து 61 ஆயிரத்து 764. வடநாட்டு பாங்கிகளில் உள்ள மொத்த மூலதனம் 35 கோடியே 41 லட்சத்து 86 ஆயிரத்து 679 ஆகும். அதாவது சுமார் 6 மடங்கு அதிகமாகும்.

வடநாட்டு பாங்கிகள் 36ல் ரூ. 15 லட்சத்துக்குமேல் மூலதனம் உள்ள பாங்கிகள் 26 !

தென்னாட்டு பாங்கிகள் 36ல் ரூ. 15 லட்சத்துக்குமேல் மூலதனம் உள்ள பாங்கிகள் 15 !

அந்த 26 வடநாட்டு பாங்கிகளில் ரூ. 25 லட்சத்துக்குமேல் மூலதனம் உள்ளவை 21.

ஆனால், அந்த 15 தென்னாட்டு பாங்கிகளில் ரூ. 25 லட்சத்துக்கு மேல் மூலதனம் உள்ளவை 9.

அந்த 21 லும் ரூ 50 லட்சத்துக்கு மேல் மூலதனம் உள்ள வடநாட்டு பாங்கிகள் 18.

ரூ 50 லட்சத்துக்குமேல் மூலதனம் உள்ள தென்னாட்டு பாங்கிகள் நான்கே நான்குதான்.

ரூ. 1 கோடிக்குமேல் மூலதனமுள்ள வடநாட்டு பாங்கிகள் 11; தென்னாட்டில் ஒரே ஒரு பாங்கிதான்.

மேற்கண்ட கணக்குகளில் கூட்டுறவு பாங்கிகளை (Co-Operative Banks) சேர்க்கவில்லை. அன்றியும், ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் உள்ளவையும் ஏராளமான மூலதனம் படைத்தவையுமான ஆங்கில பாங்கிகளும் விடப்பட்டிருக்கின்றன.

இதில் நாம் கவனிக்க வேண்டியது வடவரின் பாங்கிகளுக்கு கிடைக்கும் லாபத்தைவிட, பாங்கிகளினால் பயனடையும், வளர்ச்சியடையும் வடநாட்டு வாணிபமேயாகும்.

இந்தச் சமயத்தில் பாங்கிகளுக்கும் வாணிபத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றிக் காணவேண்டுவது மிகவும் அவசியமாகும்.

ஒருவன் தன்னிடமுள்ள கைமுதலை வைத்துக்கொண்டே வாணிபம் செய்வதெனில், அவனது வாணிபம் குறிப்பிட்ட ஒரு சிறு வரம்புக்குள்தான் நடைபெறும். தனது கைமுதலைக் கொண்டு சரக்கை வாங்கி, அந்தச் சரக்கு விற்கப்பட்டு பணம் முழுதும் மீண்டும் கைக்கு வரும்வரை புதிதாக சரக்கைக் கொள்முதல் செய்ய அவனால் முடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பாங்கிகள் வாணிபம் செய்வோனுக்கு, மேலும் தன் கைமுதல் சக்திக்கும் மீறிய அளவில் வாணிபம் செய்ய ஊக்கமும், துணையும் அளிக்க முன்வருகின்றன. தனது கைமுதலைக் கொண்டு வாங்கிய சரக்குகளின்பேரில் சரக்குகளின் கொள்முதல் விலையில் 70 அல்லது 80 சத விகிதம் பாங்கியில் பணம் பெற்று மீண்டும் அந்தப் பணத்திற்கும் சரக்குகளைக் கொள்முதல் செய்ய, பாங்கிகள் உதவுகின்றன.

எப்பொழுதும் விலையாகும் பல வகையான விவசாயப் பொருள்கள் (நெல், நிலக்கடலை, பருத்தி etc) ஒவ்வொன்றும் ஒவ்வொரு பருவத்தில்தான் கிடைக்கின்றன. கிடைக்கும்போது நிறைய வாங்கி வைத்துக் கொண்டால்தான் பின்னர் நல்ல லாபத்திற்கு அவைகளை விற்றுப் பயனடைய முடியும். தன்னிடமுள்ள கைமுதல் அளவிலேயே வாங்குவதெனில் ஒரு வணிகன் மிகக் குறைந்த அளவிலேயே வாங்கி வைத்திருந்து விற்கும்போதும் மிக்க குறைந்த அளவிலேயே லாபத்தையும் பெறமுடியும். ஆனால்; பாங்கிகளின் உதவி இருந்தால் தன்னிடமுள்ள கைமுதலைப் போய் பல மடங்கு தொகைக்குச் சரக்குகளை வாங்கி வைத்திருந்து விற்கும்போது அதிக சரக்குகளுக்கு அதிக லாபத்தை அடைந்து, பாங்கிகளின் உதவிக்காகச் சிறிய அளவு வட்டி மட்டும் தந்து நல்ல பயனடைய முடிகிறது.

மேலும், பெரும் லாபம் தரும் ஏற்றுமதி, இறக்குமதி வாணிபத்தில் ஈடுபடுவோருக்கு கடன் உதவிக்கு மட்டுமன்றி, பாங்கியின் நிழலிலிருந்து மட்டுமே வெளிநாட்டுத் தொடர்புகளைக் கொள்வது சாத்தியமாகிறது.

எனவே, வாணிபம் செழித்தோங்க பாங்கி வசதிகள் இன்றியமையாதவையாகின்றன. அத்தகைய இன்றியமையாத வசதிகளையும்வடவரே பெற்றுள்ளனர். அவர்களது வாணிபம் நாளுக்குநாள் செழித்தோங்குகிறது.

—தொடர் கட்டுரை

காமராசரே! காமராசரே!

'காமராசர் யார்? அவரது குணநிசயங்கள் என்ன? புலியுள்ளம் கொண்டவரா, புறம் நின்று தாக்கும் பண்புடையவரா? அன்புக்கரசரா, அம்பாகத்துளைப்பவரா?'—காமராசர் குறித்து இத்தகு ஆராய்ச்சியிலே இதுவரை நாம் இறங்கியதில்லை: பாதகம் புரியமாட்டார், நாம் அவருக்கு பாலும் ஊற்றவேண்டாம் என்றுதான் எண்ணியிருந்தோம். நமது அமைதி கண்டு திருவல்லிக்கேணி திகிலடைந்திருந்தது, நமக்குத் தெரியும்; தி. மு கழகத்திற்கும் காமராசருக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகக்கூட மாம்பலமும், மயிலாப்பூரும் கதைகட்டி, 'காலட்சேபம்' நடத்திவந்தனர். 'டில்லி' கூட மகிழ்ந்ததாகக் கேள்விப்பட்டோம். தென்னாட்டு எதிர்ப்பு, காமராசர் முதன் மந்திரியானது மூலம் நசித்துப் போய்விட்டது என்று மூலஸ்தானத்து 'செம்புச்சிலை'கள் மகிழ்ந்தனவாம்: நமது எதிர்ப்புக்கு, கட்டிடத்தின் அடித்தளத்தையும் அதிரச் செய்திடக்கூடிய சக்தி இருக்கிறது என்ற செய்தி கேட்டு பெருமைப்பட்டோம்; இயக்கத்தின் சக்தியை ஒருமுறை நம் இதயத்தோடு அணையவிட்டு ஒரு கணம் பூரித்துப் போனோம். அந்த வெற்றிக்களிப்பிலேகூட 'மெய்மறந்து' காமராசரை ஆதரித்துவிடவில்லை. 'வரவேற்கிறோம்; ஆதரிக்கவில்லை' என்று தான் தி. மு. கழகம் திட்டவட்டமாகச் சொல்லி வந்தது. ஒருவேளை, நமது அமைதியையும், வரவேற்பையும், காமராசர் வேண்டுமானால் பெருந்துணையாகக் கருதிக்கொண்டிருந்திருக்கலாம்; அது நமக்குத் தெரியாது; அவருக்கும் நமக்கும் வெகுதூரம். ஆனால், காலம் கூறும் கருத்தை அலசிப் பார்த்தால் காமராசர், பூ மறைத்த பூநாகமோ என்றுகூட எண்ணிடத் துணிகிறது நம் உள்ளம். இந்த வேதனைப் பேச்சுக்கு மூலகாரணம், காமராசரின் சமீப காலத்திய விபரீதப் போக்கு தந்த அச்சமோ, ஆத்திரமோ அன்று; அல்லது, 'கோயிலடி குருமூர்த்தி'களிடம் 'சபாஷ்' பட்டம் பெற்றுவிட்டார் விருதுநகர்க் கோமான் என்பதால்கூட அல்ல. காமராசரின் படை பலத்தை நாமறிவோம்; உதட்டின் அசைவிலேயே, ஓராயிரம பொருள்கக்கும் பொல்லாத வார்த்தைகளை விதைத்துவந்த வியாசர்பேரன் ஆச்சாரியாரை அளந்து பார்த்து அவரை 'ஜெய ஜெய புவனபதே' போடவைத்த படிக்கற்கள் நம்மிடமிருப்பவை. எனவே, நம் உள்ளத்திலே அச்சம் பிறக்க வழியில்லை; ஆத்திரப்பட்டும் பழக்கப்படாதவர்கள் நாம். "பிறகேன் காமராசர் மீது சீறிப் பாயவேண்டும்?" நண்பர்கள் கேட்கலாம். நாடாள வந்த 'ராஜர்' மீது நமக்கென்ன கோபம்! ஆனால் தமிழுக்குத் துரோகம் புரிய நினைக்கும்போது? தமிழ் வளர்த்த மேதையை திரையிட்டு மறைக்க எண்ணும்போது? தமிழ் நெஞ்சம் கொந்தளிக்காதா? திராவிடர் உள்ளம் தீக்காடு ஆகாதா? காற்றிலே மிதந்து வந்து, நம் காதிலே ஒலித்த சேதி-அந்தத் துன்பச்சேதி உண்மையானால் காமராசர் தாயகத்திற்கு பெருந் துரோகம் புரிந்துவிட்டார் என்றுதான் அர்த்தம்; வடவருக்குத் தாழ்ந்திப் பணிபுரியும் தவறைக் காட்டிலும், வஞ்சகமற்ற நாட்டுப்பணியில் தன்னைப் புகுத்திவிட்ட பெருந்தலைவனுக்கு-தமிழ்த்தலைவனுக்கு மனமறிந்த செய்த 'இமாலயத் துரோகம், என்றுதான் அர்த்தம்.

யார் அந்தத் தலைவன்?

தென்னகத்தைக் காட்டி, டேராடூனின் தாழ்வாரத்தில் வாழ்வோரின் புன்னகைக்கு காத்துக்கிடந்தவரா? இல்லை; காங்கிரசின் காரியக்கமிட்டிக்கு அடிபணியமாட்டேன் என்று சொல்லிவிட்டு காங்கிரசைவிட்டு வெளியேறிய, தமிழ்த்தென்றல் அவர்.

யார் அந்தத் தலைவன்?

நேருவுக்கு அஞ்சி, நெஞ்சில் பட்ட கருத்துக்களையெல்லாம் நெறித்துக் கொன்ற 'மனச்சான்று வைரி'யா? இல்லை; காங்கிரசின் கொள்கை சமதர்மம் அல்ல; அல்ல; அது காங்கிரசால் முடியவே முடியாது என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிய தொழிலாளர் இயக்கம் கண்ட மூதறிஞர் அவர்.

யார் அந்தத் தலைவன்?

பெண்ணடிமை ஒழிக்கப் பாடுபட்டு பெண்ணின் பெருமையை நாட்டுக்குணர்த்திய குணமலை! அவருடைய உருவப்படம்-தமிழ்ப் பழம் திரு. வி. க. வின் உருவப்படம் தமிழகத்துப் பள்ளிகளில் இருக்ககூடாதாம்-இப்படி ஒரு சுற்றறிக்கையை சர்க்கார் உலவ விட்டிருப்பதாக நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. இந்தக் கொடுமை, ஆச்சாரியார் தர்பாரில் நடந்திருந்தாலும் நாம் ஆத்திரப்படுவதற்கில்லை; ஆனால், காமராசர் ஆட்சியில் இப்படி ஒரு வதந்தி உலவுவதே நம்மால் சகித்துக்கொள்ளமுடியாதது. இத்தகு சுற்றறிக்கையை 'மாவட்டக் கழகப் பள்ளிகளுக்கும், ஏனைய பள்ளிகளுக்கும் சர்க்கார் அனுப்பியிருப்பது உண்மையானால் காமராசர் பூ மறைத்த பூநாகம்தான். ஐயமில்லை! ஐயமில்லை!!

"தேனு"

கதையல்ல!

கதிரன்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் உள்ளங்களை தலைமுறைக்குத் தலைமுறை, காலம் எப்படி மாற்றிவிடுகிறதுஎன்பதை விளக்கிடும் மனோதத்துவக் கட்டுரை இது. கொம்புகளுக்கு எண்ணெய் தடவி, கண்ணைக் கவரும் வகையில் காளைகளை மாட்டுச் சந்தைக்குக் கொண்டுவரும் வியாபாரிகளைப்போல, சொந்த மக்களை கல்யாணச் சந்தைக்குத் தயாரிக்கும் பழைமை விரும்பிகளுக்கு இந்தக் கட்டுரை நல்ல படிப்பினை.

[ஆர்.]

ஜூன் மாதம் சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வெப்பத்தின் கொடுமை தாங்க முடியாததாயிருந்தது.

பத்து மணிக்கே சூரியன் மிக தீட்சண்யத்துடன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். செருப்பையோ, பூட்ஸையோ அணிந்திடாமல் நடந்து செல்பவர்களைக் கதிரவன் நடனமாடச் செய்துகொண்டிருந்தான்.

நகராது-நகரமுடியாது சத்தியாக்கிரகம் செய்துகொண்டிருந்த இரட்டை மாட்டுவண்டி ஒன்றைத் தள்ளுவதில் முனைந்திருந்தார் ஐம்பது வயது நிரம்பிய பெரியவரொருவர். இருபக்கத்துச் சக்கரங்களையும் தூக்கித்தள்ள பிரயாசைப் பட்டுக்கொண்டிருந்தனர் இளைஞர் இருவர். வேறொரு இளைஞன் எருதுகளை முன்பக்கத்தில் இழுத்துக் கொண்டிருந்தான். பெரியவருடையவும் அவர் தம் பண்ணையாட்களாகிய அம்மூன்று இளைஞர்களுடையவும் முயற்சி வீணாயிற்று. மண்ணில் சக்கரங்கள் சிக்கிக்கொள்ளவே, ஒரு காளை சலிப்படைந்து படுத்துக் கொண்டது. மற்ற காளை தனது சகாவின் பலவீனத்தைக் கண்டு பரிதாபப்படுவதுபோல் அதனைக் கடைக்கண்ணால் பரர்த்தது. வண்டியின் முற்பகுதிக்குப் பொறுப்பான ஒரு வாலிபன், படுத்துவிட்ட காளையின் வாலைப்பிடித்து முறுக்கலானுன். அது சுறு சுறுப்புடன் எழுந்திருப்பதற்காக!

வெகுதூரம் வண்டியைப் பின் தொடர்ந்து நடந்து வந்ததனுலும், மணலிலே சிக்குண்ட சக்கரங்களைத் தள்ள பிரயத்தனப்பட்டதினுலும் ஏற்பட்ட களைப்பு மிகுதியும் வருத்த வேலையாட்களிலொருவன், "எஜமான், இந்த வெப்பத்தில், இந்த மணல் மிகுந்த வழியில் மேலும் நகர்ந்து செல்ல இயலாது" எனறு கூறினுன்.

நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொண்ட தன் வேலையாளை அசுவாரஸ்யமாகப் பார்த்தவண்ணம் "கிராமத்திற்குக் குறிப்பிட்ட நேரத்திற்குள் சென்றாக வேண்டுமே" என்று பெரியவர் அலறினுர்.

"அப்படியானுல் வண்டியிலிருந்து எல்லோரும் இறங்கி நடந்தாகவேண்டும். பெண்கள் அவ்வாறு நடக்கமுடியுமா? அவர்கள் எல்லோரும் வெறுங் கால்களுடனிருக்கிறார்களே," என்று சொன்னுன்.

வண்டியிலிருந்த பெண்கள் எல்லோரும் கீழே இறங்கினுர்கள். அவர்களும் சேர்ந்து வண்டியைப் பின்னுலிருந்து தள்ள ஆரம்பித்தார்கள். சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்த தூளேயும் எழுந்து இழுக்கத் தொடங்கிற்று. இப்படியாக அந்தக் கூட்டம் குறிப்பிட்ட கிராம ஏரிக்கரையை அடைந்தது.

அவர்கள் வருகை கிராமத்திற்குச் சொல்லி அனுப்பப்பட்ட கால்மணி நேரத்திற்குள் நாதஸ்வரக்காரருடனும் மேளக்காரருடனும் அவர்களை எதிர்கொண்டழைக்க வந்தார்கள். சங்கீதம் உடன்வர, ஆரவாரம் பின்தொடர மாப்பிள்ளையின் கூட்டத்தார் கிராமத்திற்குள் நுழைந்தார்கள்.

மணப்பந்தலிலே மறுநாள் 10 வயது பையனும் 6 வயது பெண்ணும் காட்சியளித்தார்கள், மஞ்சள் உடை தரித்தவாறு. பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டுமுன்னர் ஒப்பந்தப்படி எல்லா செலவினங்களுக்கும் பணம் கொடுத்தாகி விட்டதா என்று புரோகிதர் கேட்டார். உடனே மணமகனுடைய தந்தை வெகு கம்பீரமாக நூறு ரூபா நோட்டுக்கள் பத்தை எண்ணி வைத்தார்; சில நகைகளையும் எல்லோர் பார்வையில் படும் வண்ணம் எடுப்பாக வைத்தார். பணமும் நகைகளும் பெண்ணின் தகப்பனுர் கைக்கு மாறின.

பையனின் தகப்பனுர் ஒப்பந்தத்தில் தமது ஷரத்துக்களை செவ்வனே செய்துமுடித்தார்; 'வரதட்சணை'யைப் பெண்ணின் தந்தைக்குக் கொடுத்துத் தனது வார்த்தையை நிறைவேற்றினுர். கல்யாணமும் இனிது நடந்தேறியது.

முற்பகுதியில் மணப்பந்தலிலே 10 வயது பையனுகக் காட்சியளித்தவன் 50 வயது நிரம்பிய பெரியவராகக் காட்சியளிக்கும் கட்டம் கால வேகத்திலே வந்துற்றது. வெற்றிலையும் புகையிலையும் வாய்நிறைய அடைத்துக்கொண்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

"கேசவா, சௌக்கியந்தானு?" என்று கூறிக்கொண்டே ஒரு நடுத்தர வயதினர் நீள அங்கி அணிந்தவராய் உள்ளே நுழைந்தார். அங்கவஸ்திரமும் பெரிய தலைப்பாகை ஒன்றும் அவர் தோற்றத்திற்குக் கம்பீரத்தை அளித்தன. சென்னைக்கு அருகே சுற்றுப்புற ஊர்களிலொன்றில் அவர் வக்கீல் தொழிலிலீடுபட்டு நல்ல வருவாயுடன் வாழ்ந்து வந்தார்.

கேசவன், பால்ய நண்பர் கணேசனை உடனே அடையாளங் கண்டு கொண்டார். அவர் வருகை முன்னவருக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேச சந்தர்ப்பத்தையும் கொடுத்தது.

"கேசவா, நமது நீண்டநாள் தோழமை பந்துத்வமாக மாற வேண்டுமென்பது என் விருப்பம். எனது மகளை உன் மகனுக்கு மணம் செய்துவைத்தால் எவ்வளவு சிலாக்கியமாயிருக்கும்," என்ருர் வந்தவர்.

"நிச்சயமாக: ஆனுல், பருவமடைந்த பெண் உனக்கிருக்கும் விஷயமே இதுவரை எனக்குத் தெரியாதே."

"அவள் பத்தாவது பரீட்சை இப்பொழுதுதான் எழுதியிருக்கிருள். வயது பதினுறு; அவள் கல்லூரியிலே சேர்ந்து உயர்தரக் கல்வி பயில வேண்டுமென்பதென் ஆசை; ஆனுல், பெண்களுக்குக் கல்லூரிக் கல்வி தேவையில்லை என்று சகதர்மினி நம்புகிருள். அவள் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுத் தானே தீரவேண்டும்."

"என் பிள்ளை பி. ஏ. பரீட்சை எழுதியிருக்கிறன். இதுதான் அவன் திருமணம் செய்துகொள்ள வேண்டிய நல்லவயது என்பதால் அவனை மருமகனுக அடைய 'நான்' 'நீ' என்று போட்டி போட்டுக்கொண்டு பலர் என்னைத் தொல்லைக்களாக்கிக் கொண்டிருக்கிருர்கள்."

"என் மகள் குயில்போல் பாடுவாள். ஏராண்டுகளாக ஒரு பிரபல சங்கீத வித்வானிடம் பயிற்சி பெற்று வந்தாள். ஆர்மோனியம் அனுயாசமாக வாசிப்பாள். குணசுந்தரி; ரூபவதி; கல்யாணத்திற்காக ஒரு நல்ல தொகையை ஒதுக்கி வைத்திருக்கிறேன். அவள் என் ஏகபுதல்வி. நல்ல குணம் படைத்த கணவனும், நிம்மதியான ஒரு குடித்தனமும் அவள் அடைய வேண்டுமென்று நான் தவமிருக்கிறேன்."

"சரி; இந்த வரதட்சணை விஷயமெல்லாம் எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது. அதுவும் உன்னைப் போன்ற பால்ய நண்பனிடமிருந்து ஒரு பைசாகூட வாங்க எனக்கென்னவோ விருப்பமில்லை. ஆனுல் ஸ்ரீமதி கேசவனுடைய அபிப்பிராயமே வேறு. அவளுடைய தம்பியின் மகனுக்கு ரூ. 5,000 வரதட்சணை கிடைத்ததாம். அதன் காரணமாக தன் மகனும் சோடையில்லையென்று தன் தம்பியின் மனைவிக்குக் காட்ட, குறைந்தபட்சம் ஐயாயிரம் எதிர்பார்க்கிருள்,"

"ஐயாயிரமா!" என்று ஆச்சரியத்தால் அசந்துபோனுர் கணேசன்.

"ஆறுயிரம் கொடுத்தால் பல்லெல்லாம் வெளியே தோன்ற சிரிப்பாள் எனது மனையாள். உனக்கிருப்பது ஒரே புதல்வி தானே, நீ தாராளமாகவே சுப காரியத்திற்குச் செலவு செய்யலாம்."

"அவ்வளவு தானே!"

"ஆமாம் வேறு சில்லறை விஷயங்கள் இருக்கவே இருக்கின்றன. தன் வீட்டிற்கு வரும் நாட்டுப்பெண் சர்வாலங்காரங்களுடன் சிங்காரியாயிருக்க வேண்டுமென்பது அவளுடைய ஆசை."

கணேசனுடைய முகம் கலக்கமடைந்தது. "இந்த முறையில் போனுல் பெண்ணைப் பெற்றவன் 'மஞ்சள் கடுதாசி' தேடவேண்டியது தான்."

"கணேசா, காலம் மாறிவிட்டது. மிக்க பிரயாசையோடு ஏராளமான பொருளைச் செலவு செய்து நமது பிள்ளைகளைப் படிக்க வைக்கிறோம். நிறைய வரதட்சணை பெறுவார்களென்று தானே அவ்வாறு படிக்க வைக்கிறோம். பிள்ளையுடன் உன் பெண்ணும் சேர்ந்துதானே உன் செல்வத்தை அனுபவிக்கப் போகிருள். படித்துள்ள நீ, லோபி போல சிந்திக்கலாமா?"

அரை மணிநேர தர்க்கத்திற்குப்பின் வரதட்சணை ஐயாயிரமெனவும், நகை வகையரு இரண்டாயிரமெனவும் முடிவு செய்யப்பட்டு ஜாதகங்கள் பொருத்தமுடையவை என தீர்மானிக்கப்பட்ட பின்னர், கணேசன்,

"நானே எனது மகளை அழைத்து வந்து உன் பிள்ளைக்குக் காட்ட வேண்டுமா? அல்லது நீயும் உன் வீட்டாரும் என் இல்லத்திற்கு வருகிறீர்களா? அந்த நாட்களில், உன் திருமணத்தின்போது...." என்று கூறிக்கொண்டிருக்கும்போது "அந்த காலத்தில் பெண் பையனையோ, பையன் பெண்ணையோ திருமணத்திற்குமுன் கண்டதில்லை; காணவேண்டிய அவசியமும் இருந்ததில்லை. இருவருக்கும் ஒன்றும் புரியா வயதிலே ஆணும் பெண்ணும், புருஷனும் மனைவியுமாகி விட்டார்களல்லவா," என்று விளக்கினுர் கேசவன்.

எனவே, பிறிதொருநாள் கணேசன் தன் மகளுடன் கேசவன் இல்லம் சென்ருர். பெண் பையனைப்பார்த்து அவனே தனக்குகந்த நாயகனெனவும், பையன் அவள் தனக்கு சகலவிதத்திலும் தகுந்தவளெனவும் தீர்மானித்துக்கொண்டனர். நல்ல சுபமுகூர்த்தத்தில் சதிபதிகளாயினர்.

திடீரென்று புற்றீசல்போல நிசப்தத்தைக் குலைக்கக் கிளம்பியிருக்கும் ஆடோரிக்ஷா ஒன்றில் அமர்ந்த

(9-ம் பக்கம் பார்க்க)

காங்கிரசை இகழ்கிருர்!

பூக்கடைக்காரன், "எனக்காக பூ வாங்குங்கள்" என்று சொன்னுல் பூவிலே மணமில்லை என்று பொருள்.

புத்தகக் கடைக்காரன், "எனக்காக அந்தப் புத்தகத்தை வாங்கித்தானுகவேண்டும்" என்று சொன்னுல் புத்தகத்தில் சுவையில்லை என்று தான் அர்த்தம்.

அப்படியானுல், "நேருவுக்காக காங்கிரசிற்கு ஓட்டளியுங்கள்" என்று டி. டி. கிருஷ்ணமாச்சாரி புதுவை தேர்தல் பிரச்சாரத்தில் சொல்லியிருப்பதற்கு என்ன பொருள்? காங்கிரசால் பயனென்றுமில்லை. என்று தானே நாம் பொருள்கொள்ள வேண்டும்!



[இதுகேட்டு, கூத்தன், பலமாக, வாணியன்தாதனிடம்.]

கூத் : வாணியன்தாதா! நாளை உங்கள் முச்சந்தியில் கணிகை பேய்தேவி ஆட்டமல்லவா? எப்படியிருக்கும்?

வாணி : ஆட்டம்...மண்குழையும்! ஆயினும் அடுத்த கட்டத்திற்கு அழைப்புக்குவியும்!

[இது கேட்ட அரும்பாக்கத்து அருணிலைவிசாகன், பலமாக, ஆய்தேவியிடம்...]

அரும் : ஆய்தேவி! காலணி உங்கள் உடனேவந்துள்ளதா?

ஆய் : இருக்கிறது! இப்பொழுதே அது பயன்படலாம்!

பவணந்தி : (இருக்கை விட்டெழுந்து) அமைதி! அமைதி! அவை துவங்கும்வரை எப்பேச்சும் தடுக்கப்பெறுகிறது!

மோன : (சிரித்து மெதுவாக) இளங்குருதி! எத்தகு ஓட்டம்! காலம் போயின்...அமைதி பிறக்கும்!

[கம்பன் சோகமே உருவாக வருகிறுன். உடன் புகழேந்தியும் கம்பனைக் கைத்தாங்கலாக அழைத்துக்கொண்டு வருகிறுன். கூத்தன் - வாணியன்தாதன்-மாணுக்கன் ஆயமூலர் தவிர அனை வரும் கையொலி எழுப்பல். "வாழிய மாகவி!" என்னும் குரல் அவை முட்டல். மோனமாகவி எழுந்து, கம்பனின் தாள் தொடச்செல்ல, கம்பன், "வீழ்வாரை விழா முன்பேயெடுத்துத் தான் தாழ்"தல்! கம்பனும் புகழேந்தியும் இருக்கைகொள்ளல். வண்ணியூர் மாசாத்தியார், கோட்ட மங்கலம்கிழார், சோவூர் மாகதர், தென்கிழக் குடித்திருப்பல்லவராயர், செம்புலத்தார், பாப்புலி, பெருங்குடிவணிகர், முத்தரசப்பர், செம்பியன்நாட் டார், தேன்பொழி திருத்தக்கர், முல்லைக்கோ,தோரணமங்கலம் சுந்தரவித்தகர், கலிப்பாக்காளையர், காட்டங்குடியார், முதலி யோர் அணியாக வருதல்...அமர்தல்.]

பவணந்தி : (எழுந்து) வாழிய சோழமண்டலம்! வாழிய தமிழ்! வாழிய கழகம்! புலமைப் பெரியீர்! பெரும்பலரும் குழுமியுளது கண்டு இறும்பூதெய்துகின்றனம்! இது போது...முதன் முதலில் பெரும்புலவரின் மறைவு குறித்து, அரும்பாக்கத்து அருணிலைவிசாகர் தெரிவிக்கும் எண்ணம், இரங்கல் நிமித்தம் அவைவிட்டு வெளியேறி மீண்டும் வரலாகும்! புலவோர் கருத்தில்...ஏதேனும் மாறுபாடு....

கூத் : (எழுந்து) அவசியமில்லை! பேரவையில் அவர் உறுப்பின ரல்லர்! உறுப்பினர்க்கு மட்டுமே இரங்கல் விதி!

அரும் : (எழுந்து) கொலை பேசுகிறது-மனிதத்தன்மையற்று!

கூத் : நிறுத்தும்! அருணிலை விசாகரே! இதில் நீர் தலையிடக் கூடாது! அமைச்சரே முடிவு கூறல்வேண்டும்!

பவ : அமைதி! அமைதி! மறைந்த புலவர் புலமைக்கடல்! இரங்கல் மனிதகுணம்! புலவர் மறுத்தல் முறையன்று!

[எல்லோரும் அவைவிட்டு வெளியேறி மீண்டும் வரல். கூத்தனும் அதில் கலந்துகொள்கிறுன். விசாகரை விழுங்கிவிடுவான் போலப் பார்க்கிறுன். எல்லோரும் அமர்தல்.]

அரும் : (எழுந்து) அமைச்சரீர்! புலவீர்! புன்னகை அரும்பிப் பொலியும் கழகத்தில், இன்று பெரும் புலவர் பலரின் முகங்களில் சோகந்தோயக் காண்கிறோம். இது ஏன், என்ன காரணம் என்பதெல்லாம் அவையறிந்ததே! அது தறித்து அவை ஆயாமல் முடியாது. ஆனாலும் மேலும் வரும் மோதலினைத் தவிர்ப்பான் வேண்டி, இந்தப் பேரவைக் கூட்டத்தில் அது வேண்டாம் என அமைச்சர் பவணந்தி முனிவர் கேட்டுக்கொண்டதற் கிணங்க, இன்று அதனைக் கிளர்ந்து விடுகின்றனம். இன்றில்லையெனினும் என்றேனும் ஒரு கூட்டத்தில் இதுபற்றி ஆயப்படும் என, 'நிகழ்ச்சிமுறைப் பொறுப் பாளன்' என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன். மகனை இழந்து தவிக்கும் மகாகவி கம்பருக்கு இப்பேரவை ஆறுதல்தான் கூறமுடியும். அது போதாது எனினும், அது தவிர வேறென்று செய்ய இயலாத நிலை ...

[பெருங்குடி வணிகர் முத்தரசப்பர் எழுந்து, இடைமறித்து....]

முத் : இயலாதென ஏதுமில்லை. இயலும்...ஓர் முடிவு யான் கூறமுடியும். ஆயாது செயல்புரிந்த குலோத்துங்கனை நாம் கண்டிக்கிறோம் என்பதற்கு அறிகுறியாக, அரசவை நிகழ்ச்சிகளில் நாம் பங்கேற்பதில்லை என்று கூறிவிட வேண்டும்.

வாணியன்தாதன் : (எழுந்து) அப்படிச் செய்தால் கம்பருக்கு அமைதி கிடைக்குமா? அம்பிகாபதி எழுந்து வந்து விடுவானு?

முத் : விந்தையான கேள்வி! தவறுசெய்தாரைத் தண்டிப்பது, அதே தவறு சரியாகிவிடும் என்பதற்காக அல்ல; அடுத்த தவறை அவ்வளவு துணிவாகச் செய்யாமலிருப்பர் என் பதற்காகத்தான்!

கூத் : (எழுந்து) இது முத்தரசப்பர் கருத்தே...அவை இன்னும் முடிவு செய்யவில்லை. ஆயினும் இதுபற்றி யான் சில கூற விழைகிறேன். கொலை செய்யப்பட்டோரும்...அது குறித்து அவதியுறுவோரும் பேரவையின் கண்களுக்குத் தெரிகின்றனரேயன்றி, மானம் அழியும் நிலையைக் கண் முன் கண்ட மன்னனின் நிலை தெரியவில்லை...

செம்பியன் நாட்டார் : (எழுந்து) மகள், களங்கமற்ற காதல் புரிந்தது மன்னனின் மானம் பறிபோகும் செயல் எனக் கூத்தர் கருதுகிருரா?

கூத் : ஆம்.

ஆய்தேவி : (எழுந்து) அப்படியெனில், கூத்தர் மணமுடித்ததும், அவரது மாமனுரின் மானம் பறிபோயிருக்கவேண்டுமே!

[அவையில் கையொலி; நகைப்பு.]

செம்பியன் : சரியான சொல்! இதனை இவ்வாறே விளக்கமுடியும்!

முத் : தன் 'முறையற்ற செய'லும் அதில் அடங்குவதால், கூத்தர் தடுத்துரைக்கிருர். நான் கோரிய முடிவைப் பேரவை எடுக்கும் எனக் கருதுகிறேன்.

கூத் : இத்தகு கேவலமான தன்னலனைப் போக்கினை அவை இன்றுதான் காண்கிறது!

அரும் : இதனைக் குடவோலை முறையில் முடிவுகட்டுவோம்.

முல்லைக்கோ : (எழுந்து) முறைதான்! ஆயினும் அதற்கெனக் காலந் தாழ்த்தவேண்டா! எதிர்ப்போர் யாவர் எனத் தெற் றெனக் காணமுடிகிறதே!

பவ : அருள்கூர்ந்து அனைவோரும் அமர்க!

[யாவரும் அமர்தல்.]

''அரசவை மறுப்''பினை எதிர்ப்போர் எழலாம்!

[கூத்தன், மாணுக்கன், வாணியன்தாதன், காட்டங்குடியார்-- ஆகிய நால்வர்மட்டுமே எழல்.]

பவ : அரசவை நிகழ்ச்சிகளில் கழக உறுப்பினர் கலந்துகொள் வதில்லை என, மிகுதொகையில் பேரவை முடிவு செய் கிறது!

[அவையில் பலத்த கையொலி. கம்பன்மட்டும் மௌனம் சாதிக்கிறுன். கூத்தன், வாணியன்தாதன், மாணுக்கன், காட்டங்குடியார் வெளியேறல். பேரவை நிகழ்ச்சிகள் தள்ளி வைக்கப்படுவதாக பவணந்தி அறிவித்தல்.]

—காட்சி முடிவு—

களம் 6

காட்சி : 6
இடம் : அரண்மனை முன்புறம்.
நேரம் : பகல்.

[அரண்மனையின் அழகிய முகப்பில், காவல் வீரர்கள் அலை பாய்ந்து கொண்டிருக்கிருர்கள். ரதம் ஒன்று வந்து நிற்கிறது. ஒட்டக்கூத்தனும் வாணியன்தாதனும் இறங்குகிருர்கள். ஒட்டக் கூத்தன், உள்ளிருந்து வந்த ஒரு முதியவரைப் பார்த்து...]

கூத் : மன்னர் எங்கே இருக்கிருர்?

கண்ணதாசன்

முதி : காலையிலேயே எழுந்து, ரதத்தில் சென்றவர், இன்னும் வரவில்லை.
கூத் : தனியாகவா சென்றார்?
முதி : கூட, அமைச்சர் அஞ்சிலஞ்சியார் சென்றிருக்கிறார்.
வாணி : குதிரையில்தானே போவார்.
முதி : இன்றென்னவோ ரதத்தில் போயிருக்கிறார்.
கூத் : சரி! வந்ததும் என் இல்லத்திற்குச் செய்தி அனுப்புங்கள்.
முதி : நல்லது!

[கூத்தனும் வாணியன்தாதனும் ரதத்தில் ஏறிச் செல்லல். முதியவர் அதைப் பார்த்தபடி நிற்கிறார்.]

—காட்சி முடிவு—

களம் 7

காட்சி : 7
இடம் : காட்டுக்குடில்.
நேரம் : அந்தி.

[குலோத்துங்கனும் அமைச்சர் அஞ்சிலஞ்சியாரும் தூரத்தில் நின்று குடிலைக் கூர்ந்து கவனிக்கின்றனர். 'மினுக்'கிடும் விளக்கின் ஒளியில் எதுவும் விளங்கவில்லை. இருவரும் மெதுவாக நடந்து, குடிலின் ஒரு புறத்தை அடைகின்றனர். காற்றுமாடத்தின் வழியே கவனிக்கிறார்கள்.

உள்ளே :--நெற்குன்றவாணர் அமர்ந்திருக்கிறார். அவர் எதிரே சுந்தரசோழனும் மல்லிகையும் அமர்ந்திருக்கின்றனர். மல்லிகை, மார்பகத்தில் கச்சுக் கட்டி, வெண்ணிற ஆடை அணிந்து, 'முனிபத்தினி' போன்று காட்சி தருகிறாள். சுந்தர சோழன், மேலாடை இன்றி, அழகிய மார்பகத்தில் முத்தாரம் தவழக் காட்சி தருகிறான். நெற்குன்றவாணர், மேலாடையை மார்பைச் சுற்றித் தோளில் போட்டவாறு அமைதியாக அமர்ந்துள்ளார்.

வெளியே--இதைக் கவனித்த குலோத்துங்கனும் அஞ்சிலஞ்சியாரும் சப்தமில்லாமல் அப்படியே காற்றுமாடத்தருகில் உட்கார்ந்துவிடுகின்றனர்.

உள்ளே—.]

நெற் : தம்பீ! ஆரம்பித்துவிடலாமா?
சுந் : நல்லது ஐயா!
நெற் : நாடக உருவிலேயே சமைத்துவிடலாம்!
மல் : எனக்கும் அதுதான் ஆசை! நாளைக்கு இதை நடிப்பதானாலும் நானும் இவருமே நடிக்கலாம்.

[நெற்குன்றவாணர் சிரிப்பு--சுந்தரன் மல்லிகையைப் பார்க்க, அவள் தலை குனிதல்.]

நெற் : சரி! அப்படியே செய்வோம்.
சுந் : எங்கிருந்து துவங்கலாம்?
நெற் : இலக்கியக் கழகத்தில் உறுப்பினராக, கம்பன், அம்பிகாபதியை அழைப்பதிலிருந்து...
சுந் : நல்லது ஐயா...கூறுங்கள்...

[சுந்தரன் ஏட்டையும் எழுத்தாணியையும் தயாராக்கிக்கொள்கிறான். நெற்குன்றவாணர் கூறத்துவங்குகிறார்...]

நெற் : காலைநேரம்...கம்பன், குளித்தநிலையிலே இல்லத்திற்குள் நுழைகிறான். அங்கு அம்பிகாபதி, தன்னை மறந்த நிலையில் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறான். இதைக் கண்ணுற்ற கம்பன்...

—காட்சி முடிவு—



திருப்புக் காட்சி

களம் 8

காட்சி : 8
இடம் : கம்பன் இல்லம்.
நேரம் : காலை.
கம் : நீ இன்னும் குளிக்கவில்லையா?
அம் : இல்லை...
கம் : ஏனப்பா இப்படி! வெண்ணெய்நல்லூரிலிருந்து சடையப்பரும் இணையாரமார்பரும் இன்னும் சிறிதுநேரத்தில்

மயில்போல் இனியமென் சாயனல்லாருடன்
வல்வினையேன்
துயில்போன தின்னமுந் தோன்றவும்காண்கிலன்
சோலையிளங்
குயில்போல் மொழியவர் தம்குழல் போலிருள்
கூர்ந்துகொற்ற
அயில்போல் மதஞ்செய்கண் போல்அற நீளும்
அருங்கங்குலே.

—அம்பிகாபதிகோவை.

வருகிறார்கள். வந்ததும், கழகத்திற்குச் செல்லவேண்டும். நீ இப்படியே எழுதிக்கொண்டிருந்தால் என்ன ஆவது! போ! போய்க் குளி!
அம் : (மகிழ்வுடன்) இன்றுதானே நான் கழகத்தில் உறுப்பினராகும் நாள்.
கம் : ஆம்!
அம் : அப்படியானால்...இதோ ஒரு நொடியில் குளித்து வருகிறேன்.

[அம்பிகாபதி எழுந்து செல்ல, கம்பன் சிரித்தபடி, ஆடையணிதல். வெளியிலே ரதம் வந்து நிற்கும் சப்தம். கம்பன் திரும்பிப் பார்க்க, சடையப்பரும், இணையாரமார்பரும் வருகிறார்கள்.]

கம் : வரவேண்டும்! வரவேண்டும்! வழி வழி பார்த்திருந்தேன்...
சடை : வழியில் ஒரு வேடிக்கை. கண்ணமங்கலத்தருகில், ஒரு கலவரம். அதைத் தீர்த்துவைக்கும் பொறுப்பினை, வலிய நாங்களே ஏற்றுக்கொண்டோம். இன்றேல் இரவே வந்திருப்போம்.
கம் : இளவல் அதில் தேர்ந்தவராயிற்றே!
இணை : (சிரித்து) அப்படி ஒன்றுமில்லை...நமக்கு நற்பெயர் தருவதற்கென்றே கலகங்கள் நடைபெறுகின்றன--நம்மை அழைக்கின்றன.

[கம்பன் சிரிப்பு.]

சடை : தம்பியின் நீதிநியாயப்பேச்சே அவர்களைக் கவர்ந்துவிட்டது!
கம் : அது சரி...உண்ண ஏதாவது...
சடை : வேண்டாம். எல்லைச் சத்திரத்தில் இன்பமான உணவு! இரண்டு தினங்களுக்குப் பசியெடுக்காது.
கம் : சுவைநீர்...
இணை : போதும்! ஆடவர் குடும்பம்--அரசு கட்டிலில் பெண்மை இல்லை. வேண்டுமென்று சொல்லிவிட்டால் வேதனைப்படுவீர்கள்!
கம் : கவலை இல்லை! வெண்ணெயூர்ச் சடையப்பர் வீட்டு விருந்துபோல் இல்லாவிட்டாலும், எங்கள் வீட்டு 'ஆடவர் உணவு' உண்டால் குமட்டாது...உள் இறங்க மறுக்காது... உறுதிகூற முடியும்!
சடை : அப்படியென்ன நான் விருந்து கொடுத்துவிட்டேன். எல்லாம் சாதாரணம்தான்!
கம் : யார் சொன்னது!

ஆன்பாலும் தேனும் அரம்பை முதல் முக்கனியும்
தீம்பாய உண்டு தெவிட்டுமனம்—
....
மறக்குமோ வெண்ணெய் வரிசடையூர்க் கம்பன்
இறக்கும்போ தேனும் இனி!

இணை : அண்ணா! இது உணவுக்கு நற்சான்று! உங்களுக்கல்ல!
சடை : அதுவரை பிழைத்தேன்!
கம் : (சிரித்து) சரி...ஏதாவது நீங்கள் உண்டுதான் ஆக வேண்டும்.

—(அடுத்த பக்கம்)

யார் இந்த நேரு ?

நேரு-புல்கானின் ஒப்பந்தம், திராவிடரின் நெஞ்சைத்துளைக்கும் அடிமை சாசனம் !

" ஒரு நாடு, மற்றொரு நாட்டைச் சேர்ந்த பகுதிகளை, அந்த நாட்டின் பகுதி என்று கருதி அந்த நாட்டின் ஆட்சிக்கு மதிப்பளிக்கவேண்டும்." இது ஒப்பந்தத்தின் முதல் கொள்கை. அங்கே, ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட வடநாட்டுப் பண்டிதர் இங்கே அவ்வாறு நடந்துகொள்கிறாரா? வேறொரு நாடான திராவிடத்தை தன் கொடையின்கீழ் வலுக்காட்டாயப்படுத்தி இழுத்துவந்து காலடியிலே போட்டு அல்லவா மிதித்துத் துவைக்கிறார்! "ஒன்று மற்றொன்றின்மீது ஆக்ரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலிருத்தல்"-இது இரண்டாவது கொள்கை. ஆனால், இங்கே, தென்னாட்டைப்பற்றி 'கனவு' கண்டாலும் இமயகிரியின் அடிவாரத்திலிருந்து கணை கிளம்புகிறது. "பொருளாதார ரீதியிலோ, அரசியல் ரீதியிலோ, கொள்கை ரீதியிலோ உள்நாட்டில் தலையிடாதிருத்தல்"—இது மூன்றாவது கொள்கை—இங்கே பண்டிதர் வேறு நாடான திராவிடத்தை எல்லா 'ரீதி' களிலும் அடக்கியாளத் துடிக்கிறார். வளமற்ற இந்தியைப் படிக்க வேண்டுமாம்! வரிப்பணம் அனைத்தையும் டில்லிக்கே கொட்டியழ வேண்டுமாம்!

" சமாதானமாக ஒத்து வாழ்தல்"—இது இறுதிக் கொள்கை. இது நடக்கக்கூடிய காரியமா? பிரிந்து வாழத்துடிக்கும் திராவிடத்தை அயல்நாட்டு அரசியல் ஒப்பந்தத்தின்மூலம் மீண்டும் ஒட்டிக்கொள்ள நேரு செய்த 'செப்படி வித்தை'யா?

இவைகளுக்கெல்லாம் 'சக்கரக்கொடியினர்' சமாதானம் கூறத் துடிப்பர். இந்தியா ஒரே தேசமல்லவா என்பர். " இந்தியா ஒரு தேசமல்ல; ஒரு நாடல்ல; அது ஒரு துணைக்கண்டம்" என்று அதிகாரப் பூர்வமாகவே தி. மு. கழகம் சொல்லியிருக்கிறது.

ஒரு கண்டம் பல நாடுகளாகத்தான் பிரிக்கப்படவேண்டும் என்றும், 32 தனித்தனி நாடுகள் கொண்ட ஐரோப்பா முழுவதும் ஒரு குடையின்கீழ் இருக்கவேண்டுமென யாரும் கூறவில்லையென்றும், அதுபோல இந்தியாவும் ஒரு குடையின்கீழ் இருக்கவேண்டிய அவசியமில்லையென்றும் அறிஞர் அண்ணா அவர்கள் 1950 லேயே தெரிவித்திருக்கிறார்கள்.

ஒரு இனத்தாரின் கருத்தை யறிந்துகொள்ளாமலே, அந்த இனத்தாரையும் சேர்த்து பிறநாட்டோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தில் கையொப்பமிட, யார் இந்த நேரு? என்ன உரிமை இருக்கிறது அவருக்கு?

நாங்களும் நீங்களும்

ராஜ தண்டனை

ராஜ தண்டனை நாடகம் பற்றி எழுதியிக்கும் நண்பர்களின் கடிதங்களையும், தலைப்பிலே வடமொழி வார்த்தை இருக்கிறது என்றுஎழுதியிருக்கும் நண்பர்களின் கடிதங்களையும் அடுத்த வாரம் பிரசுரித்து பதில் தருவோம்; ஆவன செய்வோம.

இலக்கியப் போட்டி

மதுரை தியாகராயர் கல்லூரி நண்பர்கள், சேலம் வலப்புரி எழிலன், மற்றும் பதினறு நண்பர்கள், திருச்சி, பம்பாய், கோவை நண்பர்கள் தந்தியிலும், கடிதத்திலும் இலக்கியப்போட்டி முடிவுக்கு இன்னும் ஒரு மாத காலம் தவணை கேட்கின்றனர்- ஐந்து மாத காலம் தவணை கொடுத்தும் இன்னும் நண்பர்கள் தவணையிலேயே இருப்பது வியக்கத்தக்கது. ஆயினும் 31-7-55 வரை முடிவு தேதியை ஒத்தி வைத்திருக்கிறோம். நண்பர்கள் அதற்கு மேலும் தவணை கேட்காமல் விரைவிலேயே அனுப்பி வைக்கக் கோருகிறோம். நீதிபதிகளின் பரிசிலனை முடிந்து பரிசு பெற்ற இலக்கியங்கள் பற்றிய விபரம் 1-10-55 ம் தேதி இதழில் வெளியிடப்படும். 9-10-55 அன்று பரிசு வழங்கும் விழாவும் பாராட்டுரையும் சென்னையிலே நடைபெறும்.

தேர்ந்தெடுக்கப்படாத இலக்கியங்கள் 1-10-55 அன்றே திருப்பி அனுப்பப்படும். நண்பர்கள் கண்டிப்பாக ரிஜிஸ்தர் தபாலிலேயே அனுப்பக் கோருகிறோம்.

அவசரப்பட்டு சில நண்பர்கள், பாதி பாதியாக இரண்டு தபாலில் அனுப்புகிறார்கள். அது தவறு; ஒழுங்குபடுத்துவதில் சிரமம் ஏற்படுகிறது- நிற்க,

இலக்கியத்தை அனுப்பிவிட்டு தபால் எழுதி பதில் பெற நினைக்காமல்,ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவதின்மூலம் ரிஜிஸ்தர் ரசீதையே பதிலாகக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—போட்டி நிர்வாகி

பத்திரிகைக் காகிதம்

கடந்த நான்கு வாரங்களாக "தென்றல்" அச்சடிக்கப்படும் பத்திரிகைக் காகிதம் மட்டமாக இருப்பதாக நண்பர்கள புகார் செய்திருக்கிறார்கள். எங்களுக்கும் அது தெரிகிறது; புரிகிறது. என்ன செய்வது! மொத்தமாக இதே காகிதம் எங்களிடம் வந்து சேர்ந்துவிட்டது. ஆயினும் அடுதத வாரத்திலிருந்து நலல காகிதத்தில் அசசடிககபபடுமென உறுதி கூறுகிறோம்.

முகவரி முறை

"தென்றல்" அலுவலகத்திற்கும், ஆசிரியருக்கும் கடிதமெழுதும் பலருக்கும் ஒரு வார்த்தை. பத்திரிகை சம்பந்தமாக ஆசிரியருக்கு எழுதும் கடிதங்களை, "ஆசிரியர் "தென்றல்" சென்னை-6" என்ற முகவரிக்கும், கூட்டங்கள் சம்பந்தமாக தனிபபட எழுதும் கடிதங்களை "கண்ணதாசன் "தென்றல்" சென்னை-6" என்ற முகவரிக்கும், ஏஜண்டுகள் எழுதும் கடிதங்களை "ஏஜன்சி நிர்வாகி" என்று முகவரியிட்டும், சந்தாதாரர்கள், "சந்தா நிர்வாகி' என்று முகவரியிட்டும எழுதக் கோருகிறோம. இம்முறை பிசகுவதால்தான் கடிதங்களுககு பதில எழுதுவதில் தாமதம் ஏறபடுகிறது. நண்பர்கள் கவனிக்க.

—நிர்வாகி

தென்றல்-திரை-மலர்

செப்டம்பரில் வெளிவர இருக்கும் "தென்றல்-திரை" சிறப்பு மலர் நடிகையர், லலிதா, பத்மினி, ராகினி முதலியோரின் சுவையான குறிப்புகளோடு இதுவரை வெளிவராத புகைப்படங்களோடும்,நமது புகைப்பட நிருபர் சி. என். சாமுவேல் அவர்கள் எடுத்த அற்புதமான படங்களோடும் வெளிவர இருக்கிறது.கண்ணதாசன் எழுதும், "கதை வசனம் எழுதும் முறை" என்னும் அழகிய கட்டுரையும், டைரக்டர் ராம்நாத் அவர்களின் அற்புதக் கட்டுரையும் இன்னும் பல வேடிக்கையான அம்சங்களும் அதில இடம்பெறும். ஏஜண்டுகள் ஜூலை முடிவுக்குள் பணம் அனுப்பி பதிவு செய்துகொள்ளாவிட்டால் கண்டிப்பாக மலர் அனுப்பமுடியாதென்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

தனி மலர் பெற விரும்புவோர் 1-4-0 ரூபாய்க்கு தபால் பில்லைகள் அனுப்பவேண்டும்.

—மலர்நிர்வாகி "தென்றல்-திரை"

ராஜ தண்டனை...

(முன் பக்கத் தொடர்ச்சி)

சடை : நான் முன்பு சொன்னபடி நீங்கள் முதலில் திருமணம் செய்துகொள்ளுங்கள். பிறகு தேவியாரின் சமையலை சிந்தை கனிந்து உண்கின்றோம்!

கம் : உஸ்...மெதுவாகச் சொல்லுங்கள்; அம்பிகாபதி வரப்போகிறான்...அவனுக்கு இதெல்லாம் பிடிக்காது. முதல் மனைவி இறந்துவிட்டால் கணவனும் மாண்டுவிடவேண்டுமென்று கருதுபவன் அவன்!

[சிரிப்பு--அம்பிகாபதி வருதல்.]

அம் : வருக! வருக! வணக்கம்!

சடை : வணக்கம்!

இணை : வணக்கம்!

அம் : காலந்தாழ்த்திவிட்டேன். மன்னிக்க!

சடை : மோசமில்லை!

இணை : ஒருமுறை கழகத்தில் அமர்ந்து வாதப்போரில் இறங்கிவிட்டால், பிறகு தூக்கமேவராது. பிறகு நீ தான் அதிகாலையில்--முதலில் கழகக் கட்டிடத்தையே திறப்பாய்!

அம் : (ஆடையணிந்து கொண்டே) நாளைக்கே அது நடக்கலாம்!

கம் : புறப்படலாம்.

[எல்லோரும் புறப்படல்.]

—காட்சி முடிவு—

களம் 9 (2-5)

காட்சி : 9

இடம் : இலக்கியக் கழகம்.

நேரம் : காலை.

[அவை நிறைந்திருக்கிறது. அவைப்புலவர்களோடு--நிகழ்ச்சி காணவந்தோரும் நிறைய அமர்ந்திருக்கிறார்கள். கம்பன், அம்பிகாபதி, சடையப்பர், இணையாரமார்பர் முதலியோரர் உள் வரல். அவையில் கையொலி. கூத்தன், அலட்சியமாகச் சாய்ந்தபடி இருக்கிறான். கம்பனின் வரவையே அவன் பொருட்படுத்தவில்லை. சடையப்பரைப் பார்த்து...]

கூத் : வாரும் முனிவரே! வருகை எப்போது!

சடை : முனிவரா! மனைவியர் எனக்கு மூவர், கூத்தரே!

கூத் : அல்ல! சடை அப்பர்--அதாவது சடாமுடி கொண்டவர்--இது பொருள்--நேராக்கம்--முனிவர்!

சடை : [சிரிக்காமல்] சாதாரண நகைச்சுவை!

[அவையில் சிரிப்பு.]

கூத் : வெண்ணெய், நெய்யாவதாகக் கேள்வியுற்றேன்,

சடை : விளங்கவில்லை.

கூத் : உங்கள் ஊரில் வெய்யில் அதிகமாமே!

சடை : (மெதுவாகச் சிரித்து) மோசமில்லை!

இணை : எது? கூத்தரின் நகைச்சுவையா, வெய்யிலா?

[அவையில் சிரிப்பு. கூத்தன் முகம் சுருங்குகிறது. "அமைதி! அமைதி!" என்னும் குரல். அமைச்சர் பவணந்தி முனிவர், ஆசனத்தில் அமர்கிறார். உள்ளே, மூப்பைத் தொடும் நிலையில் உள்ள ஒருவர் நுழைகிறார்--அவை பலத்த கையொலியோடு அவரை வரவேற்கிறது.]

பவ : வருக! வருக! ஏகம்பவாணரே! இன்தமிழ்ப் புலவரே! வருக! வருக! விருந்தாளியை வரவேற்பதிலே கழகம் பெருமை யடைகிறது! அமர்க!

[ஏகம்பவாணர் ஓடிப்போய், முதலில் அம்பிகாபதியைக் கட்டிக் கொள்கிறார்.]

(தொடரும்)

கதையல்ல...

(5-ம் பக்கம்தொடர்ச்சி)

வண்ணம் நவநாகரிக வாலிப ஞெருவன் பெண்கள் கல்லூரி விடுதி யொன்றை நோக்கிக் கன வேகமாய்ச் சென்றுகொண்டிருந் தான்.

கல்லூரிமண்டபத்திற்குவெளியே ஆடோ ரிக்ஷா நின்றதும் அதை விட்டிறங்கி ஒரு பெண்ணின் வரவை எதிர்நோக்கிக் காத்துக்கிடந்தான், கணேசனின் மகளுக்கும், கேசவ னின் மகனுக்கும் பிறந்த புத்திர சிகாமணி.

ஓட்டமும் நடையுமாக வெளியே வந்த ஒரு நவநாகரிக யுவதியை வரவேற்ற வண்ணம், "ஹலோ காந்தா, உனக்காக யுகக்கணக்கில் காத்துக் கொண்டிருக்கிறேனே" என்று புளுகினுன். நீலவானத் தைப் போட்டிக்கழைத்திடும் மெல் லிய புடவையையும் அதற்குத் தகுந்த துல்லிய ரவிக்கையையும் அணிந்தவளாய், கையிலே பவுடர், வாசனைத்திரவியம், கைக்குட்டை முதலியவை அடங்கிய ஜம்பப்பை ஒன்றை ஏந்தியவளாய் முல்லைச் சிரிப்புடன் "படித்துக்கொண்டிருந் தேன். நம் சந்திப்பை அறவே மறந்துவிட்டேன்; மன்னிக்கவேண் டும்" என்று அவள் கூவினுள்.

" இன்னும் ஒரு மாதம் தானிருக் கிறது. பரீட்சைக்கு நானுந்தான் ஏகமாய்ப் படிக்கவேண்டியிருக் கிறது. எவ்வளவு நேரம் படித் தாலும் மூளையில் ஒன்றும் நுழைய மாட்டேனென்கிறது. எந்நேரமும் உன் நினைவாகவே இருப்பதால் எனக்கு நிம்மதியென்பதே இலாது போய்விட்டது."

"சேகர், நீ படிப்புக்கு அதிக நேரம் செலவழிக்கவேண்டும்" என்று செல்லமாய்க் கடிந்து கொண்டாள்.

" என்ஞல் அதைத்தானே செய்ய இயலவில்லை. நம் திருமணத்தை உடனே நடத்திவிடுவதுதான் அதற் குள்ள ஒரேவழி. அப்போதுதான என் துணைவியாக அழகு மயமான சௌந்தர்யமிக்க சுந்தரக்கிளி ஒன்றை அடைந்துவிட்டேனென்ற திருப்தி எனக்கேற்படும். மயிலை யிலே ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதிலே நாமிரு வரும் பரீட்சைக்குப் படிக்கலா மல்லவா ?"

" திருமணம் ஒரு வேடிக்கை யல்ல சேகர். நீ சொல்கிறபடி அவ்வளவு எளிதில் நாம் தம்பதி களாகிவிடமுடியாது. பெற்ருேரின் சம்மதத்தைப் பெற்ற பின்தான் திருமணம்."

" தாராளமாக ! திருமணம் செய்துகொள்வதற்குமுன் அவர் களுக்குத் தந்தி அனுப்பலாம். திருமணப்பதிவு அதிகாரி முன் னிலையில் நடைபெற இருக்கும் நமது வாழ்க்கை ஒப்பந்தத்தை அவர்கள் கண்டு களிக்கட்டுமே."

காந்தா சிரித்தாள். "எவ்வளவு பெரிய ஏமாற்றம் அடையப்போ கிருரோ உன் தாயார். நிறைய வர்தட்சணையுடன் வரும் நாட்டுப் பெண்ணையன்ருே எதிர்பார்ப்பார்-"

"கண்ணே, காலம் மாறிவிட்டது. வரதட்சணையையா நான்கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன். எனக்கு வேண்டியது நான் விரும் பும் காந்தா தானே !"

" அதிருக்கட்டும். திருமணத் தைப் பற்றி உன் கருத்து இன்ன தென்று தெரியாது. நானெப்படி இல்லற வாழ்க்கையை உன்னுடன் நடத்த ஒப்பமுடியும் ?"

" திருமணமென்பது ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் காதலித்து வாழ்க்கைத் துணைவ ராகஉள்ளங்கள் இணைந்துகொள்வ தாகும். ஆணிடம் பெண்ணை விற் பதோ, வலுக்கட்டாயமாக ஜோடி சேர்ப்பதோ திருமணமல்ல. திரு மணம் என்பது இல்லற வாழ்க்கை யின் ஒப்பந்தமாகும். இருவர் சேர்ந்து கூட்டு வியாபாரம் செய் வதற்காக ஏற்பாடு செய்துகொள் கின்ற ஒப்பந்தத்தைப் போன்றதே. இதில் சோதிடனுக்கோ, சகுனத் துக்கோ, பஞ்சாங்கத்துக்கோ மதத் துக்கோ, கடவுளுக்கோ,இடமில்லை. இவையாவும் உண்மைக் காதலுக் குக் குறுக்கே வீசப்படும் முட்டுக் கட்டைகள்."

"என் கருத்தை அப்படியே பிரதிபலிக்கிருயே.இருந்தாலும்..."

" இதோ பார், காந்தா, வீணில் நேரத்தை வீணுக்காதே. காலமோ குறைந்தது. அதில் வாலிபப்பருவம் மிகக் குறைந்தது. ஐந்துமணிக்குத் திருமணப்பதிவு அதிகாரியின் அலு வலகம் மூடிவிடப்போகிறது. இந்த ஆடோவிலே இப்போதே சென்று சம்பிரதாயத்தை நிறைவேற்றிவிட லாம். அநாவசியமாகப் பெற் ருேரைப் பற்றியும் உற்ருரைப் பற்றியும் நினைத்துக்கொண் டிராதே. முடிவில் நாமன்ருே திரு மணம் செய்துகொண்டு இல்வாழ்க் கை என்ற சாகரத்தைக் கடக்க வேண்டியவர்கள். பிறருடைய விருப்பு வெறுப்புக்களைப் பற்றியோ என தாயாரின் ஏமாற்றத்தைப் பற்றியோ நாம் ஏன் பேசிக் காலங் கழிக்கவேண்டும். நீ என் கண் ணல்லவா, வா செல்வோம்."

" பதிவு செய்வதற்கு ஏதோ பணம் தரவேண்டியிருக்குமே. என் பையில் இருப்பதோ மிகச் சொற் பம்."

" இது மாதக் கடைசி எனவே என் மணிபர்ஸிலும் இருப்பது சொற்பத் தொகைதான். நம்மிரு வர் முதலையும் ஒன்று சேர்ப்போம். எல்லாம் சரியாகவே முடியும். வா போகலாம்," என்று துரிதப் படுத்திஞன் சேகர்.

ஆடோ, காதல் ஜோடியுடன் திரு மணப்பதிவு அதிகாரியின் அலு வலகம் நோக்கிப் பறந்தது.

கண்ணதாசன் இலங்கைப் பயணம்

"பாஸ்போர்ட்" தொல்லை தொடர்ந்துகொண்டே இருக் கிறது. ஆயினும் 13-7-55 க்குள் கிடைத்து விடலாமென்ற நம் பிக்கை இருக்கிறது. ஆகவே ஆகஸ்ட் மாதத்தில் புறப்படு கிருர். இதுபற்றி இலங்கைத் தோழர்களுக்கு அறிவிக்கப்பட் டிருக்கிறது.

சிலம்புவழங்கும் செல்வம்

பன்மொழிப் புலவர் அவர்க ளுக்கு உடல்நலம் இன்னும் சீர்பட வில்லை. ஆகையால் சிலம்புவழங் கும் செல்வம் இன்னும் தாமதிக் கிறது. சீரடைந்ததும் சிறப்புற வெளிவரும்.

முகவரி

பன்மொழிப்புலவர்,
கா. அப்பாத்துரையார்,
M.A., L.T.,
13, அருணுசல ஆசாரி தெரு,
சேப்பாக்கம், சென்னை.



வெண்பாப் போட்டி 12.

★

ஈற்றடி :

வாள்கொண்டு தாக்குவோம் வா !

முடிவு தேதி 23-7-55.

வெண்பாப் போட்டி 11-ன் பரிசுபெற்ற வெண்பாவும் ஏனைய வெண்பாக்களும் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

குமாரி கோமளம்...

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

யாரால் அவரை நெருங்க முடியும்? சிமயன்கலே நெருப்புக்கோழிகள்; சினம் வேறு கொண்டுவிட்டால் சொல்லவா வேண்டும்!

பொன்வண்டு நிற 'பேபி'க் கார் வந்து நின்றது. அரங்கநாதரின் மேலாள் அவசர அவசரமாக காரை விட்டிறங்கி பயபக்தியுடன் அரங்கநாதரிடம் ஏதோ சொல்லி இடுப்பிலிருந்து ஒரு காகிதச்சுருளை எடுத்துக் கொடுத்தார். மிராசுதாரின் உதடுகள் துடித்தன. துப்பாக்கியிலிருந்து கிளம்பிய ரவைபோல வீட்டுக்குள் பாய்ந்தார். குமாரசாமி ஜரிகைத்தலைப்பாகை அணிந்து 'திருவனந்தபுரத்து சித்திரைத் திருநாள்' மகாராஜாவைப்போல அலங்கரித்து மணமேடை வரத்தயாராக இருந்தான். "ஏண்டா குமாரசாமி! உன் மனதிலே என்னதாண்டா நினைப்பு? முகூர்த்தத்திற்கு இன்னும் மூன்று மணி நேரம்தான் இருக்கிறது. அதற்குள்ளாக என் மானத்தையே வாங்கிவிட்டாயேடா?" என்று கர்ஜித்துக்கொண்டே அந்தக்காகிதச்சுருளை அவனிடம் வீசி எறிந்தார். மாப்பிள்ளை குமாரசாமி கடிதத்தைப்படிக்கவேயில்லை. அந்தக் கையெழுத்தைப் பார்த்தவுடனேயே மயங்கிச் சாய்ந்துவிட்டான்.

"குமாரசாமியாருக்கு வாழ்க்கைப்பட [illegible] கலைகம் [illegible] குமாரசாமியார் எனது கணவர் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். கர்ப்பிணி நான்-கண்ணீரை மையாகக்கி இந்தக் கடிதத்தை உனக்கு எழுதத் துணிந்திருக்கிறேன். குமாரசாமியாரை நீ ஏற்றுக்கொண்டால் என் வாழ்வு பாழாவதோடு மட்டுமன்றி, உன் வாழ்வும் நாளை செத்துப்போகும். எனக்கு எதிராக போர்க்கொடி ஏந்திவிடாதே சகோதரி. முன் கூட்டியே ஆவன செய்துகொள்"

இந்த வாசகங்கள் அடங்கிய கடிதம் விஷயம் தெரிந்த அனைவரையுமே கலக்கத்திற்குள்ளாக்கியது. எதிர் நோக்கி இருக்கும் ஆயுள்தண்டனையை நினைத்து நினைத்து கவலைப்படும் கைதியைக் காட்டிலும், எதிரிப் படை, இரும்புக்கோட்டைகளையும் இடித்துத் தள்ளிவிட்டு அரண் புகப் போகிறது என நெஞ்சு கலங்கும் மன்னவனைக் காட்டிலும் அரங்கநாதர் மனம்நொந்து சோர்ந்து போனார்.

காலை மணி பத்து. திருமணத்திற்கு இன்னும் இரண்டு மணி நேரம்தானே பாக்கி.

"சிவக்கொழுந்து! சிவக்கொழுந்து!!" அரங்கநாதர் மேலாளை அழைத்தார். இடுப்பிலே துண்டுகட்டி,கைகட்டி வாய்பொத்தி பக்கம் வந்து நின்றார் சிவக்கொழுந்து.

அரங்கநாதர் சிவக்கொழுந்துவிடம் ஏதோ ரகசியம் சொன்னார்.

"என்ன, என்ன! அவளையா? என்னங்க!"

"அட போய்யா! நீ எனக்கு யோசனை சொல்லவேண்டாம்." என்று கடிந்தார் மிராசுதார்.

சிவக்கொழுந்து பந்தலைவிட்டுப் புறப்பட்டு ஒருமணி நேரத்திற்குப் பிறகு, மணப்பெண்ணோடு காரில் வந்திறங்கினார். ஆகாயம் அதிரும் இசைமுழக்கத்தோடும் அமோக வரவேற்போடும் மணப்பெண் வரவேற்கப்பட்டாள். அந்த நேரத்தில் "இவளா பொண்ணு! பெரிய இடம்னு சொல்லிக்கிட்டாங்களே! அந்த வாசனையே பொண்ணு முகத்திலே காணமே" என்று மணப் பந்தலில் குரல் கிளம்பாமலில்லை- ஆனாலும் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

★

"போ! போய்த் தொலை சனியனே! கூலி பேசித் தானே உனக்குத் தாலி கட்டினேன். கூடவே இருப்பதற்கா? போ! இனி இங்கே இருக்கவே கூடாது. போய்விடு"

"போனவாரம் தான் தாலி கட்டினீர்கள்; இந்த வாரம் கழுத்தையே பிடித்துத் தள்ளுகிறீர்களே" என்று தேம்பி அழுதுகொண்டே இளைஞனின் காலிலே விழுந்தாள் அந்த யுவதி.

"ஆம்; தாலி கட்டினேன்; ஏன் தெரியுமா? குறிப்பிட்ட நாளிலே திருமணத்தை நடத்தாது போனால், என் தந்தைக்கு உள்ள கௌரவம் அழிந்து போகுமே என்பதற்காகத் தானே தவிர, உன் வடிவிலே மயங்கி அல்லடி! இம்! பேதைப் **பெண்! உனக்கு எங்கேயடி தெரியப்போகிறது பெரிய இடத்து விஷயங்களெல்லாம்! ஓடிப்போய் விடு!**இந்தா பிச்சைக்காசாக ஒருவாரம் ஊராரை ஏய்க்க மனைவியாக இருந்ததற்கு இந்த நூறு ரூபாயை எடுத்துக்கொண்டு பிழைத்துப்போ" என்று எரிந்து விழுந்து ஒரு கண்ணாடிக் கோப்பையை எடுத்து அவள் மீது வீசினான் அந்த வெறியன். ஏழ்மையினால் மறைக்கப்பட்ட அந்த உயிர்ச்சிலையாள், தன் எதிரிலே [illegible] மாமிசபிண்டம்' நீட்டிய [illegible] அந்தப் பணித்தும் [illegible] வீசிவிட்டு வெளியேறினாள். [illegible] பகுதியிலிருந்து ரத்தம் கொட்டிய வண்ணமிருந்தது அவளுக்கு.

★

"கனகா! என்மேல் ஏன் இவ்வளவு கோபம்? என் தந்தை சொல்லை மீறக் கூடாதென்று தானே அந்தத் திருமணத்திற்கு ஒப்புதல் கொடுத்தேன். அதற்கா இவ்வளவு ஆத்திரப்படுகிறாய்! நீ குணசுந்தரிக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்தும்கூட ஆவேசப் படாமல், மீண்டும் உன்னைத் தேடி வந்திருக்கிறேனென்றால், இதைக் காட்டிலுமா என் பாசத்திற்கு சான்று வேண்டும்! கண்ணே, இன்ப ஊற்றின் கபாடங்களையெல்லாம் திறந்துவிட்ட நீயா என்னை அவமதிப்பது! கனகா! கனகா."

"போதும்; உமது சர்க்கரைப் பேச்சிலே மயங்கிக்கிடந்த காலம் அழிந்து பல நாட்களாகிவிட்டன. இழிகுணத்தான் என்று பெயரெடுத்துவிட்ட நபரை அதை மறைக்க என்னாலும் முடியாது. போய்விடுங்கள். [illegible] பசியவனென்று [illegible] [illegible]

வாழ வேண்டுமென்ற என் ஆசையை இந்த உலகம் ஏற்கவில்லை. போய்விடுங்கள் குமார்."

★

என்னப்பா குமார், நீ என்ன இப்போது சாதாரணகுமாரசாமியா? டைரக்டர் குமாரசாமிசே!"

"டில்லிக்கு ராஜாவாக இருந்தாலும் பள்ளிக்குப் பிள்ளைதானே பிரகாஷ்,உனக்கு நான் எப்போதும் குமாரசாமிதான்."

"எப்படியோ டைரக்டராகி விட்டாய்! சொத்தை அழித்தாவது ஒரு தொழிலைப் பழகிக்கொண்டாய் என்பதிலே எனக்குப் பரம திருப்தி நண்பா!"

"நான் டைக்டரான கதையையா சொல்கிறாய்! வேண்டாம் பிரகாஷ்! வேண்டாம்! இப்போது நினைத்தாலும் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது!"

★

"என்னங்க, குமார், ஏன் இவ்வளவு சோர்வு? ஏதாவது...?"

"நான் அப்படியொன்றையும் உபயோகிப்பதில்லை கோமளம்! ஆனால், உன் மார்பகத்திலே உள்ள கருந்தழும்புதான்...!"

"ஏன்? அதைக் கண்டு ஏன் நீங்கள் கவலைப்படவேண்டும். நான சிறுபிள்ளையாக இருக்கும்போது தவறி விழுந்ததின் விளைவாக ஏற்பட்ட காயத்தின் வடு அது!"

"இல்லை கோமளம்! என் மனச்சாட்சி கொல்லுகிறது; நான் வருகிறேன்; என்னை மன்னித்துவிடு. கூலிக்கு மனைவியானவள் என்று கடிந்துரைத்தேனே அன்றொரு நாள், அன்று உன்மீது நான் கண்ணாடிக் கோப்பைத் தூக்கி எறிந்தபோது ஏற்பட்ட காயமென்பதை நான் அறிவேன் கோமளம்! அந்தக் கோமளம், நீதான் என்றறிந்திருந்தால்,இந்தப்படி வாசலை மிதித்திருக்கமாட்டேனே! கோமளா! கோமளா!"

"ஆ! குமாரசாமியா!" கோமளா படுக்கையில் சாய்ந்தாள். மயக்கம் தெளிந்து [illegible]

திருத்தம்

சென்ற இதழ் 'வாழ்வது எப்படியோ' கட்டுரையில் Investers Encyclopaedia என்று பிரசுரமாயிருந்ததை Investors Encyclopaedia என்று திருத்தி வாசித்துக்கொள்ளக் கோருகிறோம்.

★

[illegible] தொடர் நாடகம் [illegible] முதல் [illegible] 11-வது [illegible] 'முன்பேமிறுத்து' என்பதை 'முன்வேலிருத்தா' என்றும், 2-ம்பக்கம் அத்தியாயம் 53-வது வரியில் 'இசாந்து' என்றிருப்பதை 'இளகும' என்றும் திருத்திக் கொள்ளவும்.

தோட்டத்து மலர்...

(2 ம் பக்கம் தொடர்ச்சி)

சித்திரக்காரனை டிஷியன் என்பான். அவன் சார்லஸ் மன்னனின் அரசவைக் கலைஞனாக் சிறப்புப் பெற்றிருந்தான்.

மனித குலத்தின் ஆதி பிதாக்களான - முதல் மனித சிருஷ்டிகளான - ஆதாமும் ஏவாளும், ஏதேன் தோட்டத்தில் சுற்றித்திரியும் காட்சி அந்தப் படத்தில் வரையப்பட்டிருந்தது. இருவரும் அழகின் திரட்சிகளாக விளங்கினார்கள்; அவர்கள் அந்தப் பூர்வ காலத்து ஆடை அணிந்திருந்தார்கள். இல்லை, இல்லை! அவர்கள் தங்கள் பேதமையையே ஆடையாக தரித்திருந்தார்கள்! அதாவது முழுக்க முழுக்க நிர்வாணமாக இருந்தார்கள், அந்த ஆதிகாலத்து ஆணும் பெண்ணும்! நாணத்தின் கீறலில்லை; வெட்கத்தின் சாயலில்லை; ஏனெனில், அந்த தோட்டத்திலிருந்த அறிவென்னும் கனியை அவர்கள் உண்ணவில்லை!

இந்த உணர்ச்சி பொங்கும் தோற்றத்தை ஜீவனோடு வர்ண ஜாலத்தில் சித்தரிப்பது மிகவும் கடினமான காரியந்தான். ஆனால், டிஷியன் தனது திறமையை எல்லாம் செலுத்தி மிகவும் உயர் தரமாக தீட்டியிருந்தான் இந்த ஓவியத்தை. இதைப்பற்றி எங்கும் பேச்சாக இருந்தது. எல்லோரும் இதைப் பார்க்க துடியாய்த் துடித்தார்கள். ஆனால், காதரைனின் மாமனாரான அந்த மன்னர் சாகும் வரை யாரும் அந்த ஓவியத்தைக் கண்டு ரசிக்க முடியவில்லை. ஏனெனில், அந்த மன்னர் தன் வாழ்நாள் முழுவதும் அந்த ஓவியத்தை தனது தனி அறையிலே மாட்டி வைத்திருந்தார்.

அவர் நோயினால் பீடிக்கப்பட்டு படுத்துக்கிடந்த அறையிலே அந்த சித்திரம் இருந்தது. பாவம்! அந்த நோயினால்தான் அவர் கடைசியில் மரணகுகையில் புகுந்துவிட்டார்!

அவர் நோயினால் படுத்திருந்த போது, ஒருநாள் காதரைன் தனது மகன் பிரான்ஸிஸையும், மகள் மார்கரெட்டையும் மன்னரின் அறைக்கு அழைத்துச் சென்றாள். அங்கே போனதும், அக்குழந்தைகள் இருவரும் ஆதாம் ஏவாள் சித்திரத்தை காணவேண்டுமென்று பிடிவாதம் செய்தார்கள். ஏனெனில், அந்த சித்திரத்தைப் பற்றி எல்லோரும் பேசிக்கொள்வதைக் கேட்டிருக்கிறார்கள். காதரைன் குழந்தைகளின் விருப்பத்துக்கு சம்மதித்தாள்.

"அதோ, அவர்கள்தான் ஆதாமும் ஏவாளும்! நமது ஆதிப்பெற்றோர்கள்" என்று சொல்லி இருவரையும் ஆதாம் ஏவாள் சித்திரத்தின்முன் நிறுத்திவிட்டு,மன்னரின் படுக்கையருகே சென்றமர்ந்தாள் காதரைன்.

குழந்தைகள் இருவரும் ஆதாம ஏவாள். சித்திரத்தின்முன் பிரமித்துப்போய் நின்றுகொண்டிருந்தார்கள். ஆதாமும் ஏவாளும் ஆடையே அணியவில்லை! குழந்தைகளுக்கு ஒரே வியப்பாக இருந்தது.

பிரான்ஸிஸ், மார்க்ரெட்டைப் பார்த்து கேட்டான்.

"இவர்களிருவரில் ஆதாம் யார்?"

அதற்கு மார்க்ரெட் பதில் சொன்னாள்.

"முட்டாள்! அவர்கள், ஆடை **அணிந்திருந்தாலல்லவா அது தெரியும்!"**

குழந்தைகளின் பேச்சைக்கேட்டு மன்னரும், காதரைன் ராணியும் மகிழ்ச்சியோடு சிரித்தார்கள்!

இதுதான் கதை. இதைப் படித்து முடிக்க நமக்கு ஐந்து நிமிஷம்கூட ஆவதில்லை. ஆனால், படித்த பிறகு என்றும் மறக்கமுடியாது!

பாலுணர்ச்சி பேதம் தெரியாத பேதைக் குழந்தைகளின் மனப் பாங்கை எத்தனை எழிலோடு சித்தரிக்கிறான் பால்சாக். அறிவின் கறைபடாத குழந்தைகளின் மனப் போக்கு எவ்வளவு இன்பந் தருகிறது! அறிவென்னும் கனியை உண்பதற்கு முன்பு இருந்த ஆதாமையும் ஏவாளையும் போலத்தான், பிரான்ஸிசும் மார்க்ரெட்டும் நடந்து கொண்டனர். ஆடை அணிந்தால் தான் ஆண் என்றும் பெண் என்றும் அடையாளம் சொல்ல முடியுமாம்! எவ்வளவு பேதமை! அந்த பேதமையிலேதான் எவ்வளவு பேரின்பம்!

இந்த விஷயம், காதரைன் ராணி பிளாரன்ஸிலிருந்து எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் எந்த எழுத்தாளனும் இதைப்பற்றி பிரமாதப்படுத்தவில்லை. பால்சாக்கைத் தவிர! அவனுடைய கதைத் தொகுதியிலேயே இதுதான் ஒப்புயர்வற்ற ஓவியமாக இருக்கிறது. இதில் பிரமாதமான நகைச்சுவை இல்லை; சூழ்ந்த சிந்தனைகள் எதுவுமில்லை; இது நமக்கு எந்த பாடத்தையும் போதிக்கவில்லை, ஒன்றைத் தவிர! "குழந்தைகளின் பேதமையிலுள்ள பேரின்பத்தை அனுபவிக்க வாவது குழந்தைகளைப்பெற்றெடுக்க வேண்டியது அவசியந்தான்" என்பதுதான் அந்தப் பாடம்!

வெண்பாப் போட்டி

10. தென்றலே யேன்வந்தாய் செப்பு

வெண்பாப்போட்டி 10-ன், பரிசுபெற்ற வெண்பாவும், பிரசுரத்திற்குத் தகுதியுடைய வெண்பாக்களும் சென்ற இதழில் பிரசுரமாயின ; தகுதியுடையன சிலவற்றை இந்த இதழிலும் வெளியிட்டுள்ளோம்.

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இக்நான்கும்
கொஞ்சமும் இன்றிக் குவலயத்தில்--பஞ்சையாய்
கண்மூடி வாழும் கயவரைக் காணநீ
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—பா. கனகா, நங்கவரம்.

★

புகுத்துவையோ பூமியில் புத்துணர்வை ; இல்லை
நகுதல் வினையழிப் பாயோ ?--பகுத்தறிவு
மன்றத் தலைவரின் மாண்புடைப் பத்திரிக்கை
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—மலையரசன், ஆரணி.

★

"காத''லாம் கத்திரிக்காய் ! கற்பனைக்குக் கன்னியரின்
வேதனையைத் தானோ விளம்புவது ?--போதுமையே !
குன்றியதி ராவிடத்தின் கூத்தனையா கேட்பது !
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—ஏ. ரங்கநாதம், பம்பாய் - 12.

★

தினத்தந்தி போலத் திரித்திடவந் தாயா ?
மனக்கருத்தைக் கூறவந் தாயா ?--இனம்ஒன் றிற்
கென்றே எழுந்தாயா ? என்தமிழை ஊட்டிடவா ?
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—சி. வெற்றிவிழைஞன், திருமங்கலம்.

★

மன்னுலகில் மன்னுது துன்பஞ்செய் ஆரியத்தின்
புன்மைசேர் வாடையைப் போக்கவல்லால்--மென்மையாய்த்
தென்பொதியில் தோன்றியென் றும் தென்னவர்க்
கின்பஞ்செய்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—இரா. அப்பாவு, கூப்பிட்டாம்பாளையம்.

★

தேனூறும் செந்தமிழாள் செவ்விதழை உண்டுநிதம்
கானம் இசைத்திட்ட காலம்போய்--ஊனமுள
நன்றியிலா இந்திப்பெண் நஞ்செனும் தோள்தழுவி
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—வாசன், வேலூர்.

★

ஒன்றியுள நேரத்தில் ஒண்காதல் பண்ணிசைக்க
நன்றிசொலி வாழ்த்தி நலமுரைத்தேன்--என் அன்பே !
என்னுயிராம் என்னன்பர் சென்றவுடன் வாட்டஎனை
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—மங்கை, வேலூர்.

★

உன்னை வரவேற்று உற்றுணர நேரமில்லை
என்மேல் கடுங்கோபம் ஏற்காதே--உண்டிடவும்
சின்னேரம் இல்லாது சீரழியும் எந்தனிடம்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

★

காதலித்த மங்கைதனைக் கைப்பிடிக்க மாட்டாமல்
பூதலத்தில் நெஞ்சம் புழுங்கினேன்--பேதலித்த
என்றன் உளச்சூடு எத்தாலும் தீராதே
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—க ஆ. கோவிந்தன், கந்தர்வகோட்டை.

★

வில்லை நிகர்நுதலும் வேல்விழியும் இன்சொல்லும்
முல்லை நிறப்பற்கள் சேர்மலர்(க்)--கொல்லையவள்
இன்றில்லை என்னருகே இன்னிசை பாடிடவே,
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—வளர்மதி பழ. கருப்பையா, தஞ்சை.

'வால்மீகி யைவாழ்த்தி வந்ததிருக்' கம்பனுக்கு
வால்பிடித்து வாழும் வகையினரால்--வேல்வீசிக்
கொன்றனைய வாடை குலாவிவரும் காட்டினுக்குள்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—அம்பிகா, விழுப்புரம்.

★

துன்பத்தால் தேய்வோம் ; துயரம் மிகப்படுவோம் ;
இன்பத்தை என்றுமே எண்ணுகிலோம்--என்றறிந்தும்,
இன்றுமட்டும் எங்கட்கு இன்பம் அளித்திடவே
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—இரா. வை. எழில், இராங்கியம்.

★

அண்ணா துரையென்னும் அன்பர் திருவகலம்
நண்ணா தவலமுறும் நங்கையென--எண்ணாதே,
மன்றல் மலர்க்கணைமெய் மாரன்தன் தேராகி
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—வி. பாஸ்கரன், சத்தியவிசயநகரம்.

★

கொல்லவோ நெஞ்சில்தீ கொட்டவோ எம்மிடையே
செல்லா துணைத்தடுத்த சீற்றமோ--புல்லாமல்
நின்று புலந்தவென்றன் நெஞ்சுடைக்கும் நீள்படையாய்த்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—ச. மரகதம் சீனிவாசன், பாப்பாரப்பட்டி.

★

நெருப்பள்ளி வீசி நிலாச்செல்வன் அய்யோ
உருக்குலைய என்னை வருத்த--பொருள்தேடி
சென்றவர் இன்னும் திரும்பவில்லை ; இந்நிலையில்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—சங்கமணி, பொள்ளாச்சி.

★

தென்னகத்துச் சோலையிலே தேன்தமிழ்ப்பூ நாற்றமதை
பன்னெடுநாள் கொண்டு பரப்பினாய்--அன்னியரின்
நன்றியிலா இந்திவெறி நச்சுக்காய் நாற்றமுடன்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—மன்னர்மன்னன்-பரந்தாமன், கல்லல்.

★

அன்னை மொழியை அரங்கேற்றப் போராடி
வன்சிறையில் என்கணவர் வாடிடவும்--தன்துணையை
அன்றில் இழந்தாற்போல் அல்லலுறும் என்னிடத்தில்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—அழ. சிதம்பரம், இராமச்சந்திரபுரம்.

★

தேன்மொழியாள் மென்றோளைத் தீண்டிக் களித்தற்கு
தேன்வழியும் சோலை வழிவந்தேன்--மான்மதியின்
தண்ணொளியாள் இல்லை ; தனிமையில் மாய்கிறேன்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—சொ. வள்ளிதாசன், அப்பிபட்டி.

★

பண்டை நினைவைப் பகரவோ ? அன்றிமற்றென்
கொண்டை மலரோடு கூடவோ ?--கொண்டவர்தான்
சென்று மறைந்த துயரைப் பெருக்கவோ ?
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

முருகு, வரகூர்.

★

கொல்லையிலே முன்னைநாள் கூடிக் குலவியகோன்
சொல்லளவில் வாராத் துயரத்தால்--அல்லலுறும்
மன்றலிலா மங்கையான் மாள்தல் புகழென்றோ
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—தமிழன்பன், காதப்பள்ளி, நாமக்கல்.

★

காதலனைக் காணாது காரிருளால் சோகமுற்றேன்
தீதனைய வெண்ணிலவோ தீய்க்கிறது--காதனின்றி
இன்றலர்பூஞ் சோலைபுகுந் தின்பமணங் கொண்டுமட்டும்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—பைலா. நா. அருணாசலம், முசிறி.

★

கன்னித் தமிழ்நாட்டார் பொன்சுரங்கக் கூலிகளாய்
செந்நீர் சொரிகின்றார் அன்னியன்கீழ்,--இந்நிலையில் ;
வன்னெஞ்சர் வாழ்வழிக்கும் வன்புயலாய்த் தோன்றாமல்,
தென்றலே யேன்வந்தாய் செப்பு.

—அ. திங்கள்கொண்டான், கடலூர் புதுநகர்.

★

எட்டாண்டை எட்டுமுன்னே நங்கை இளம்விதவை
பொட்டிடனே பூங்குழலும் தானிழந்தாள்--கட்டழகி
கன்றி உகுத்திடும் கண்ணீர் மிகுத்திடவோ
தென்றலே யேன்வந்தாய் செப்பு

—பழ. சிற்சபேசன், தேவகோட்டை.


போன் நெ 268
சங்ககால மங்கை!
சங்ககால மங்கையர் கச்சணிந்து கூந்தலுக்கு சந்தனப் புகையும், அகிற்புகையும், ஊட்டி அதைப் பின்னி விட்டிருப்பர். காதில் குழை ; கழுத்தில் ஆரம் ; கைகளில் ஆம்பல் தண்டால் செய்த தொடி ; விரல்களில் மோதிரம் இடையில் மேகலை ; காலில் நூபுரம் ; சதங்கை முதலிய அணிகள் பூண்டிருந்தனராம்!”
உயர்ந்த நகைகள் - நாணயம் - நம்பிக்கை
இதற்குச் சிறந்த இடம்
பி. ஏ. ராஜூ செட்டியார்
சுவர்ண மாளிகை!
கையோடும் கிடைக்கும் இடம்
பி.ஏ.ராஜூ செட்டியார் பிரதர்